(ii) துறைவாரி அமைப்புகளில் தான், தாங்கள் கொள்கைகள் மற்றும் செயற்பாட்டினைப் பற்றிய இரகசியங்களைப் பாதுகாத்து வைக்க இயலும்.

**2. நாட்டுடைமையாக்கல் என்றால் என்ன?**

விடை : ஏற்கனவே தனியார் துறையில் இயங்கிவரும் அதாவது தனியாருக்குச் சொந்தமான தொழில்களை அரசே ஏற்று நடத்துவது “நாட்டுடைமையாக்கல்” எனலாம்.

☆ ☆ ☆

orders@surabooks.com Ph: 9600175757 / 8124201000
Send Your Question Papers & Answer Keys to Our E-mail ID: Padasalai.Net@gmail.com

www.Padasalai.Net This is only for Sample www.TrbTnpsc.Com
for Full Book order Online and Available at All Leading Bookstores

# அத்தியாயம் 11 வங்கிகளின் வகைகள்

## பொருளடக்கம்

11.1. அறிமுகம்
11.2. வங்கிகளின் வகைகள்

## பயிற்சி

### I. சரியான விடையைத் தேர்வு செய்க

**1. கீழ்க்கண்டவற்றில் எது தொழிற்துறை வங்கி அல்ல?** *[BEQ; Govt. MQP-2018]*

அ. ICICI ஆ. HSBC
இ. SIDBI ஈ. IDBI

**[விடை. (ஆ) HSBC]**

**2. உள்ளூர் பகுதி வங்கிகள் ஊக்குவித்து வருவது** *[QY-2019]*

அ. கிராம சேமிப்பு
ஆ. வணிகச் சேமிப்பு
இ. தொழிற்துறை வளர்ச்சி
ஈ. விவசாய வளர்ச்சி **[விடை. (அ) கிராம சேமிப்பு]**

**3. வெளிநாட்டு வங்கிகள் தங்கள் செயல்பாடுகளை இந்தியாவில் ஆரம்பித்த ஆண்டு.** *[QY-2019]*

அ. 1978 ஆ. 1979 இ. 1980 ஈ. 1981

**[விடை. (இ) 1980]**

### II. குறுவிடை வினாக்கள்

**1. வணிக வங்கிகளின் பொருள் தருக.**

**விடை :** வணிக வங்கிகள் பொதுமக்களிடமிருந்து வைப்புகளைப் பெற்று, இலாபம் சம்பாதிப்பதற்காக வர்த்தகர்கள், தனிநபர்கள் ஆகியோருக்கும் விவசாயம், தொழிற்சாலைகள், போக்குவரத்து போன்ற துறைகளுக்கும் கடன்களை வழங்குகின்றன.

(எ.கா.) ஸ்டேட் பாங்க் ஆப் இந்தியா, கரூர் வைஸ்யா வங்கி.

**2. தொழிற்துறை வங்கிகள் பற்றி நீவிர் அறிவது யாது?**

**விடை :** தொழில்களுக்கான நிதிகளைப் பெரிய அளவில் வழங்குவது, அவைகளின் விரிவாக்கம், நவீனமயமாக்கல் ஆகியவற்றிற்கு நிதி அளிப்பது போன்ற சேவைகளைச் செய்வது வளர்ச்சி வங்கிகள் எனும் தனி வகை வங்கிகள் ஆகும். மேலும் அவை தொழிற்துறை வங்கிகள் எனவும் அழைக்கப்படுகின்றன.

(எ.கா.) இந்தியத் தொழில் நிதிக்கழகம், முத்ரா வங்கி.

**3. வணிக வங்கி தொடர்பாளர்கள் பற்றிச் சுருக்கமாக விளக்குக.**

**விடை :** (i) வங்கித் தொடர்பாளர்கள் மாதிரி முறையானது 2006 இல் வங்கி மூலம் சேவைகளை ஒவ்வொரு இல்லந்தோறும் வழங்குவதற்காக அறிமுகப்படுத்தப்பட்டது.

(ii) அரசு சார்பற்ற நிறுவனங்கள் அல்லது தனிநபர்கள் அல்லது முன்னாள் இராணுவத்தினர் போன்றோர் வங்கி தொடர்பாளர்களாக விண்ணப்பிக்க முடியும்.

**4. வெளிநாட்டு வங்கிகள் என்றால் என்ன?** *[BEQ; QY-2018; Mar-2019; HY-2019]*

**விடை :** (i) வெளிநாட்டில் பதிவு செய்யப்பட்ட அலுவலகத்தையும், இந்தியாவில் கிளை அலுவலகத்தையும் கொண்ட வங்கிகள் வெளிநாட்டு வங்கிகள் என்று அழைக்கப்படுகின்றன.

(ii) இந்த வங்கிகள் பெரிய நகரங்களில் மற்றும் துறைமுக நகரங்களில் அமைக்கப்பட்டு, பன்னாட்டு நிறுவனங்களுக்குச் சேவை புரிகின்றன.

(iii) (எ.கா.) பாங்க் ஆப் அமெரிக்கா – அமெரிக்கா.
பார்க்லேஸ் பாங்க் – இங்கிலாந்து



orders@surabooks.com Ph: 9600175757 / 8124201000
Send Your Question Papers & Answer Keys to Our E-mail ID: Padasalai.Net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.Com
This is only for Sample
for Full Book order Online and Available at All Leading Bookstores



## கூடுதல் வினாக்கள்

### சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக 1 மதிப்பெண்

**1. கீழ்க்கண்டவற்றில் எது வளர்ச்சி வங்கி அல்ல?**

அ. இந்தியத் தொழில் நிதிக் கழகம்
ஆ. இந்தியச் சிறு தொழில்கள் வளர்ச்சி வங்கி
இ. முத்ரா வங்கி
ஈ. ஸ்டாண்டர்டு சார்ட்டர்டு வங்கி

**[விடை. (ஈ) ஸ்டாண்டர்டு சார்ட்டர்டு வங்கி]**

**2. தமிழ்நாடு கூட்டுறவு சங்கங்களின் சட்டம்**

அ. 1983 ஆ. 1980
இ. 1986 ஈ. 1982

**[விடை. (அ) 1983]**

### குறுவிடை வினாக்கள் 2 மதிப்பெண்கள்

**1. தனியார்துறை வங்கிகள் என்றால் என்ன?**

விடை : (i) தனிநபர்களுக்குச் சொந்தமான அனைத்து வங்கி நிறுவனங்களும் தனியார் துறை வங்கிகள் என அழைக்கப்படுகின்றன.

(ii) (எ.கா.) தமிழ்நாடு மெர்கன்டைல் பாங்க், லட்சுமி விலாஸ் பாங்க், கரூர் வைஸ்யா பாங்க்.

### சிறுவிடை வினாக்கள் 3 மதிப்பெண்கள்

**1. நாட்டுப்புற வங்கியர் என்பவர் யார்?**

விடை : (i) இந்தியாவின் ஆரம்பகால வங்கியர் நாட்டுப்புற வங்கியரே.

(ii) குறிப்பிட்ட சில இனத்தைச் சார்ந்தவர்கள் வட்டிக்குக் கடன் கொடுக்கும் தொழிலைச் செய்து வந்தனர்.

(iii) (எ.கா.) தமிழ்நாட்டில் – செட்டியார்கள், மும்பையில் – மார்வாடிஸ், ஷ்ராப்புகள்.

(iv) இவைகள் இந்திய ரிசர்வ் வங்கியால் வங்கியர்கள் என அங்கீகரிக்கப்படவில்லை.

(v) எனினும் மக்கள் இவர்களிடம் கடன் பெறுவதையே விரும்புகின்றனர்.

(vi) காரணம்

(அ) எந்த நேரத்திலும் பணம் பெறலாம்
(ஆ) குறைந்த அளவு சட்ட சடங்குகள்
(இ) நேரடியாக மற்றும் உடனடியான அணுகுமுறை.

☆☆☆

orders@surabooks.com Ph: 9600175757 / 8124201000
Send Your Question Papers & Answer Keys to Our E-mail ID: Padasalai.Net@gmail.com

www.Padasalai.Net This is only for Sample www.TrbTnpsc.Com
for Full Book order Online and Available at All Leading Bookstores

# அத்தியாயம் 12 வணிக வங்கிகளின் பணிகள்

## பொருளடக்கம்


12.1. முதன்மைப் பணிகள்

12.2. இரண்டாம் நிலை பணிகள்

12.3. பரவலாக்கப்பட்ட வங்கி சேவைகள்

12.4. மின்னணு வங்கியியல் பணிகள்

12.5. அனைத்து வணிக வங்கிகளின் மொத்தப் பணிகள்


## பயிற்சி

### I. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக

**1. மின்னணு வங்கியினை______மூலம் செயல்படுத்தலாம்.**

அ. கணினிகள் ஆ. கைபேசிகள் *[QY-2019]*

இ. ATM அட்டை

ஈ. மேலே உள்ள அனைத்தும்.

**[விடை. (ஈ) மேலே உள்ள அனைத்தும்.]**

**2. RTGS மூலம் குறைந்தபட்சம் எவ்வளவு பணம் பரிமாற்றம் செய்ய முடியும்?** *[QY-2018; HY-2018, 2019]*

அ. எவ்வளவு தொகை வேண்டுமானாலும்

ஆ. 50,000

இ. 2 லட்சம் ஈ. 5 லட்சம்

**[விடை. (இ) 2 லட்சம்]**

**3. இந்தியாவின் மிகப்பெரிய வணிக வங்கி ____** *[Mar-20 19]*

அ. ஐசிஐசிஐ ஆ. எஸ்.பி.ஐ *[QY-2019]*

இ. பிஎன்பி ஈ. ஆர்.பி.ஐ

**[விடை. (ஆ) எஸ்.பி.ஐ]**

**4. எந்த வகையான கணக்கு, குறிப்பிட்ட நேரத்தில், குறிப்பிட்ட சில தொகையைச் செலுத்த வேண்டியது கட்டாயம்?**

அ. சேமிப்பு வைப்பு ஆ. நிலையான வைப்பு

இ. நடப்பு வைப்புத் தொகை

ஈ. தொடர் வைப்பு **[விடை. (ஈ) தொடர் வைப்பு]**

**5. எந்த ஒரு வகையான சேவைகள் வணிக வங்கியால் வழங்கப்படுவதில்லை.**

அ. வணிகத் தகவலைச் சேகரித்தல் மற்றும் அளித்தல்

ஆ. வங்கி மேல்வரைப் பற்று

இ. ரொக்கக் கடன்

ஈ. உண்டியல்களைத் தள்ளுபடி செய்தல்

**[விடை. (அ) வணிகத் தகவலைச் சேகரித்தல் மற்றும் அளித்தல்]**

### II. குறுவிடை வினாக்கள்

**1. கைபேசி வங்கியியல் பற்றிக் கூறுக.**

விடை : (i) பெரும்பாலான வணிக வங்கிகள் சுட்டிகை கைபேசிகளில் பதிவிறக்கம் செய்யக்கூடிய கணினி நிரல்களை அதாவது செயலிகள் (APP) என்று அழைக்கப்படும் நிரல்களை வடிவமைத்துள்ளன.

(ii) இந்தச் சேவையினைக் கைபேசி வங்கியில் என்று அழைக்கிறோம்.

**2. பற்று அட்டையின் தேவையைக் குறுகிய அளவில் விளக்குக.**

விடை : (i) தானியங்கி பணம் வழங்கும் அட்டையே பற்று அட்டை என்றும் அழைக்கப்படுகிறது.

(ii) இந்தியாவின் எந்தப் பகுதியிலும் பொருள்களை வாங்கவோ அல்லது சேவைகளைப் பெறவோ அதிக அளவில் இந்த அட்டை பயன்படுகிறது.



orders@surabooks.com Ph: 9600175757 / 8124201000
Send Your Question Papers & Answer Keys to Our E-mail ID: Padasalai.Net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.Com
This is only for Sample
for Full Book order Online and Available at All Leading Bookstores



**(ஆ) கடன்கள் :**

குறுகிய கால மற்றும் நடுத்தரக் காலக் கடன்களை வணிக வங்கிகள் தகுதிவாய்ந்த பிணையங்களைப் பெற்றுக் கொண்டு தொழில் நிறுவனங்களுக்கு வழங்குகின்றது. ஒரு குறிப்பிட்ட மொத்தத் தொகையினை ஒரு குறிப்பிட்ட கால அளவுக்குக் கடன் வழங்குவதை இது குறிக்கிறது.

1. வீட்டுக் கடன்
2. நுகர்வோர் கடன்
3. வாகனக் கடன்
4. கல்விக் கடன்
5. நகைக் கடன்

**(III) கடனை உருவாக்குதல் :**

இந்திய ரிசர்வ் வங்கியானது ரூபாய் நோட்டுகளை வெளியிடுவதோடு, ரொக்கக் கடன் சுழற்சிகளை வணிக வங்கிகளின் மூலம் உருவாக்கி, பெரிய அளவில் நாட்டின் பொருளாதார நடவடிக்கைகளுக்கு உதவுகிறது.

**2. வணிக வங்கிகளின் பல்வேறு வகையான இரண்டாம் நிலை செயல்பாடுகளை விளக்குக.** *[BEQ; QY-2018, 2019]*

**விடை :** முதன்மைப் பணிகளைத் தவிர வணிக வங்கிகள் பல்வேறு வகையான பிற சேவைகளையும் வழங்குகின்றன, அவை இரண்டாம் நிலை பணிகள் எனப்படுகின்றன.

**முகமைகள் பணிகள் :**

(i) **நிதிப் பரிமாற்றம் :** வங்கிகள் கேட்பு வரைவோலைகள், காசோலைகள், பயணிகள் காசோலைகள் போன்றவைகளை வெளியிடுவதுடன் ஒரு இடத்திலிருந்து இன்னொரு இடத்திற்கு நிதிகளை மாற்ற உதவுகிறது.

(ii) **காலமுறையில் செலுத்தும் முனைமம், வாடகை முதலியன :** வாடிக்கையாளர்களிடமிருந்து வரும் அறிவுறுத்தலின்படி காப்பீட்டு முனைமம், வாடகை, தொலைபேசி கட்டணம் போன்றவைகளை வாடிக்கையாளர் கணக்கிலிருந்து மாதந்தோறும் செலுத்தும் பணியை வங்கிகள் எடுத்துக் கொள்கின்றன.

(iii) **காசோலைகள் பெறுதல் மற்றும் செலுத்தல்:** வாடிக்கையாளர்களின் சார்பாக வங்கிகள் மற்ற வங்கிகளின் காசோலைகளை வசூலித்து வாடிக்கையாளர்களின் கணக்கில் வரவு வைக்கிறது.

(iv) **பங்கு சந்தை பரிவர்த்தனைகளை நடத்துதல் :** ஒரு டிமேட் மின்னணு கணக்கு வைப்பாளரால் தொடங்கப்பட வேண்டும். இக்கணக்கு வாடிக்கையாளரின் சேமிப்பு கணக்கு இருக்கும் வங்கியுடன் வாடிக்கையாளரால் இணைக்கப்படுதல் வேண்டும்.

(v) **வருமான வரிக் கணக்கைத் தயாரித்தல் :** வாடிக்கையாளர்களின் சார்பில் வங்கிகள் வருமானவரிக் கணக்கினை ஆண்டுதோறும் தயாரிக்கின்றன.

(vi) **அந்நியச் செலாவணி வர்த்தகத்தில் ஈடுபடுதல்:** வாடிக்கையாளர்களின் சார்பில் வங்கிகள் வெளிநாட்டு நாணய மதிப்பை வாங்குதல் மற்றும் விற்றல் பணியைச் செய்கிறது.

(vii) **தொடர்பாளராகச் செயல்படுதல் :** வாடிக்கை யாளர்களுக்கு தொடர்பாளராகச் செயல்பட்டு பயணசீட்டு, கடவுச்சீட்டு போன்றவைகளைப் பெறுகிறது.

## அரசு தேர்வு வினாக்கள்

### 1 மதிப்பெண்

**1. NEFT இந்திய ரிசர்வ் வங்கியால் தொடங்கப்பட்ட ஆண்டு:** *[June-2019]*

அ. 2005 ஆ. 2013 இ. 2010 ஈ. 1995

**[விடை. (அ) 2005]**

### 2 மதிப்பெண்கள்

**1. கடன் அட்டையை உபயோகப்படுத்தும் முறையை விவரி.**

**விடை : கடன் அட்டை :** *[BEQ; HY-2018]*

வாடிக்கையாளர்கள் மற்றும் பிற தகுதியுள்ள நபர்களுக்குக் கடன் அட்டைகளை வங்கிகள், வழங்குகின்றன. இந்த அட்டைமூலம், இந்தியாவில் எந்தக் கடையிலும் பொருள்கள் மற்றும் சேவைகளை முன்பணம் செலுத்தாமல் கடனாக வாங்கமுடியும். கொடுக்கப்பட்ட காலத்திற்குள் கடன் நிலுவைத் தொகையைச் செலுத்திவிட்டால் வட்டி விதிக்கப்படுவதில்லை.

### 3 மதிப்பெண்கள்

**1. பாரத் சஞ்சார் நிகம் லிமிடெட், சென்னை பிரிவு அலுவலகம் தன்னுடைய ஊழியர்களின் மாத சம்பளத்தை தேசிய மின்னணு நிதி பரிமாற்றம் மூலம் செலுத்த முடிவு செய்துள்ளது.**

(i) **தேசிய மின்னணு நிதி பரிமாற்றம் என்றால் என்ன?**

(ii) **இதற்கும், உண்மை நேர மொத்த தீர்வக முறைக்கும் உள்ள வேறுபாடுகள் யாவை?**

*[BEQ; Govt. MQP-2018]*

**விடை :** (i) • மின்னணு நிதி பரிமாற்றத்தின் கீழ் மொத்த நிதி பரிமாற்ற நடவடிக்கைகள், தொகுப்புகளாக்கப்பட்டு, குறிப்பிட்ட நேரங்களில் இந்தியா முழுவதும் தீர்க்கப்படுகின்றன.



Send Your Question Papers & Answer Keys to Our E-mail ID: Padasalai.Net@gmail.com

www.Padasalai.Net
This is only for Sample
for Full Book order Online and Available at All Leading Bookstores
www.TrbTnpsc.Com

# அத்தியாயம் 13 பண்டகக் காப்பு

## பொருளடக்கம்


13.1. பண்டகக் காப்பகம்

13.2. பண்டகக் காப்பகம் மற்றும் பண்டகக் காப்பு இடையே உள்ள வேறுபாடுகள்

13.3. பண்டகக் காப்பகங்களின் வகைகள்

13.4. பண்டகக் காப்பகங்களின் பணிகள்

13.5. பண்டகக் காப்பின் நன்மைகளும் குறைபாடுகளும்

13.6. பண்டகக் காப்பு ஆவணங்கள்

13.7. இந்தியாவில் பண்டகக் காப்பு


## பயிற்சி

### I. சரியான விடையைத் தெரிவு செய்க

**1. பண்டகக் காப்பகம் ..................... தடையை நீக்குகிறது.** *[QY-2019]*

அ. ஆள்சார் ஆ. காலத்தடை

இ. இடர்பாட்டுத் தடை ஈ. அறிவுத்தடை

**[விடை. (ஆ) காலத்தடை]**

**2. பண்டகக் காப்பகம் .............. மையமாக பொருட்களை வைத்திருக்கிறது.** *[June-2019]*

அ. சந்தையிடுதல் ஆ. வரிசைப்படுத்துதல்

இ. வழங்கல் ஈ. விற்பனை செய்தல்

**[விடை. (இ) வழங்கல்]**

**3. .............. வங்கியில் இருந்து நிதியுதவி பெறுவதற்காக இணைப்பாக வழங்கப்பட்டது.** *[BEQ; Govt. MQP-2018]*

அ. துறைமுகச் சான்றாணை

ஆ. பண்டகக் காப்பாளர் இரசீது

இ. துறைமுக இரசீது

ஈ. பண்டக சான்றாணை

**[விடை. (ஈ) பண்டக சான்றாணை]**

**4. பிணைய அடிப்படையில் பொருட்கள் பாதுகாப்பதற்காக அரசால் உரிமம் வழங்கப்பட்ட பண்டகக் காப்பகங்கள் ............ ஆகும்.**

அ. பிணைய பண்டகக் காப்பகங்கள்

ஆ. குளிர்பதன

இ. பொது

ஈ. மேற்கூறிய அனைத்தும்

**[விடை. (அ) பிணைய பண்டகக் காப்பகங்கள்]**

**5. பழங்கள், காய்கறிகள் போன்ற அழுகக்கூடிய பொருட்களின் சேமிப்பிற்காக .............. பண்டகக் காப்பகங்கள் பயன்படுத்தப்படுகின்றன.**

அ. ஆவணம் ஆ. தனியார்

இ. குளிர்பதன ஈ. கூட்டுறவு

**[விடை. (இ) குளிர்பதன]**

**6. சரக்குகளை முழுமையாகவோ அல்லது பகுதியாகவோ வழங்குவதற்காக, பயன்படுத்தப்படும் ஆவணம்.............. .**

அ. பண்டக சான்றாணை மற்றும் வழங்கல் ஆணை

ஆ. துறைமுக இரசீது

இ. துறைமுக சான்றாணை

ஈ. மேற்கூறிய அனைத்தும்

**[விடை. (இ) துறைமுக சான்றாணை]**



orders@surabooks.com Ph: 9600175757 / 8124201000
Send Your Question Papers & Answer Keys to Our E-mail ID: Padasalai.Net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.Com
This is only for Sample
for Full Book order Online and Available at All Leading Bookstores



3. மோட்டார் வாகனப் போக்குவரத்தினை விட பொருட்களுக்குச் சிறந்த உற்பத்தி மற்றும் பாதுகாப்பை வழங்க முடியும்.
4. ஆரம்ப முதலீடு பெரியதாக இருந்தாலும், தொடர்வண்டி ஓட்ட செலவினங்கள் தொடர் வண்டியில் மிகக் குறைவாக இருக்கும், மேலும் அது மலிவான போக்குவரத்து முறையை நிரூபிக்கும்.
5. இது ஒரு வழக்கமான கால அட்டவணையுடன் ஆண்டு முழுவதும் கிடைக்கிறது.
6. இது மழை அல்லது வெயிலான வானிலை நிலைமைகளால் பாதிக்கப்படாத சேவைகளை வழங்குகிறது.

# அரசு தேர்வு வினாக்கள்

## 1 மதிப்பெண்

**1. சென்னை நகரில் டிராம் வண்டிகள் போக்குவரத்து ......... ஆம் ஆண்டு வரை செயல்பாட்டில் இருந்தது.** *[June-2019]*

அ. 1932 ஆ. 1933
இ. 1934 ஈ. 1935

**[விடை. (ஆ) 1933]**

**2. கீழ்க்கண்டவற்றில் எது தொடர்வண்டி போக்குவரத்தின் நன்மை அல்ல?** *[BEQ; Govt. MQP-2018]*

(அ) இது ஒரு வழக்கமான கால அட்டவணையை கொண்டுள்ளது.
(ஆ) நீண்ட தூரத்திற்கு கனரக மற்றும் பருமனான பொருட்களை சுமந்து செல்வதற்கு மிகவும் பொருத்தமானது.
(இ) நீண்ட தூரப் பயணத்தை பகல்-இரவு முழுவதும் அளிக்கிறது.
(ஈ) இது பிற போக்குவரத்தைக் காட்டிலும் வேகம் குறைவானது.

**[விடை. (ஈ) இது பிற போக்குவரத்தைக் காட்டிலும் வேகம் குறைவானது.]**

## 2 மதிப்பெண்கள்

**1. மலைப்பாங்கான பகுதிகள், காட்டுப் பகுதிகள் மற்றும் மிகவும் பின்தங்கிய பகுதிகளில் பயன்படுத்தப்படும் பழமையான போக்குவரத்து ஏதேனும் இரண்டு கூறுக.** *[Mar-2019]*

விடை : (i) பொதி விலங்குகள்
(ii) மாட்டு வண்டிகள்

## 3 மதிப்பெண்கள்

**1. நிலப் போக்குவரத்தின் வகைகள் யாவை** *[QY-2019]*

விடை : (i) பொதி விலங்குகள்
(ii) மாட்டு வண்டிகள்
(iii) சாலைப் போக்குவரத்து
(iv) இயந்திர சரக்கேற்றிகள் மற்றும் பேருந்துகள்
(v) டிராம் வண்டிகள்
(vi) தொடர்வண்டிப் போக்குவரத்து

**2. ஒரு நாட்டின் எல்லையைத்தாண்டி மக்களும் நிறுவனங்களும் வியாபார நடவடிக்கையை மேற்கொண்டால் அவ்வியாபாரத்தின் பெயர் என்ன? அவ்வியாபாரத்திற்கு பயன்படுத்தப்படும் போக்குவரத்துக்களை எழுதுக.** *[HY-2019]*

விடை : **வியாபாரத்தின் பெயர் :** பன்னாட்டு வியாபாரம் / அயல் நாட்டு வியாபாரம்.

**பயன்படுத்தப்படும் போக்குவரத்து :** விமானம் மற்றும் கப்பல்.

## 5 மதிப்பெண்கள்

**1. இந்தியன் இரயில்வே உலகிலேயே ஒரு மிகப்பெரிய இரயில்வே ஆகும். அதன் உரிமையும் மற்றும் இயக்கமும் அரசாங்கத்திடமே உள்ளது. இது ஒவ்வொரு நாளும் மக்களின் அன்றாட வாழ்க்கையில் இடம் பெற்றிருக்கிறது. அதன் இயக்கப்பாதை 65,000 கி.மீ.க்கு மேல் நீளமானதாகும். இந்த தொடர்வண்டி சுமார் எட்டு பில்லியன் பயணிகளை ஏற்றிச் செல்கிறது.** *[BEQ; Govt. MQP-2018]*

**(i) தொடர்வண்டிப் போக்குவரத்தின் நன்மைகள் யாவை?**
**(ii) அதன் குறைபாடுகள் யாவை?**

விடை : (i) **தொடர்வண்டி போக்குவரத்தின் நன்மைகள்**

1. நீண்ட தூரத்திற்குள் கனரக மற்றும் பருமனான பொருட்களை சுமந்து செல்லுவதற்கு மிகவும் பொருத்தமானது.
2. தடையற்ற சேவைகளால் நீண்ட தொலைவு பயணத்தை பகல் மற்றும் இரவு முழுவதும் வழங்க முடியும்.
3. மோட்டார் வாகனப் போக்குவரத்தினை விட பொருட்களுக்குச் சிறந்த உற்பத்தி மற்றும் பாதுகாப்பை வழங்க முடியும்.
4. ஆரம்ப முதலீடு பெரியதாக இருந்தாலும், தொடர்வண்டி ஓட்ட செலவினங்கள் தொடர் வண்டியில் மிகக் குறைவாக இருக்கும், மேலும் அது மலிவான போக்குவரத்து முறையை நிரூபிக்கும்.
5. இது ஒரு வழக்கமான கால அட்டவணையுடன் ஆண்டு முழுவதும் கிடைக்கிறது.
6. இது மழை அல்லது வெயிலான வானிலை நிலைமைகளால் பாதிக்கப்படாத சேவைகளை வழங்குகிறது.

(ii) **தொடர்வண்டி போக்குவரத்தின் குறைபாடுகள்**

1. குறுகிய தூரத்திலிருக்கும் எடை குறைந்த பொருள்களைக் கொண்டு செல்ல இயந்திர போக்குவரத்தை விட தொடர்வண்டி போக்குவரத்து செலவின விகிதங்கள் அதிகம்.
2. இது நெகிழ்வானது, இது ஒரு குறிப்பிட்ட பாதையில் இணைக்கப்பட்டுள்ளதால், அது திட்டமிடப்பட்ட வழிகளில் இருந்து விலகிச் செல்ல முடியாது.

orders@surabooks.com Ph: 9600175757 / 8124201000
Send Your Question Papers & Answer Keys to Our E-mail ID: Padasalai.Net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.Com
This is only for Sample
for Full Book order Online and Available at All Leading Bookstores

# அலகு 4 சேவைத் தொழில்கள் II

## அத்தியாயம் 16 இந்தியாவில் வளர்ந்து வரும் சேவைத் தொழில்கள்

### பொருளடக்கம்

16.1. தனி உரிமையியல்
16.2. ஏட்டுக்கடன் முகமை
16.3. பெயர்ச்சியியல்
16.4. புறத் திறனீட்டல்
16.5. மின்னணு வணிகம்

### பயிற்சி

**I. சரியான விடையைத் தேர்ந்தெடு**

**1. எந்த ஒரு தொடர்ச்சியான உறவு வணிகத்திற்கான உரிமத்தை வழங்குகிறது, பயிற்சி அளிக்கிறது. கிளை விற்பனை செய்வதை கருத்தில் கொள்வது....... என அழைக்கப்படுகிறது.**

அ. தனி உரிமையியல் ஆ. ஏட்டுக்கடன் முகமை
இ. அளிப்புத் தொடர் மேலாண்மை
ஈ. பரிமாற்றம் **[விடை. (அ) தனி உரிமையியல்]**

**2. பணியமர்த்தல், கடன் சேகரிப்பு, ஆலோசனை போன்ற முழுமையான சேவைகள் வழங்குவதற்கு ஒப்புக்கொடுக்கும் ஒரு நிபந்தனை................. என்று அழைக்கப்படுகிறது.**

அ. முதிர்வு ஏட்டுக்கடன் தரகு வணிகம்
ஆ. தேசிய ஏட்டுக்கடன் தரகு வணிகம்
இ. அனைத்து சேவை ஏட்டுக்கடன் தரகு வணிகம்
ஈ. துணை நாடாத ஏட்டுக்கடன் தரகு வணிகம்

**[விடை. (இ) அனைத்து சேவை ஏட்டுக்கடன் தரகு வணிகம்]**

**3. மின்னனு வலைப்பின்னல்கள் மூலம் பொருட்களை வாங்குதல் மற்றும் விற்பனை செய்தல்............ என அழைக்கப்படுகிறது.** *[BEQ; Mar-2019]*

அ. மின்னணு வணிகம் ஆ. இணையதளம்
இ. வலைதளம் ஈ. வர்த்தகம்

**[விடை. (அ) மின்னணு வணிகம்]**

**4. உற்பத்தியாளரிடமிருந்து பொருட்களை நுகர்வோருக்கு எடுத்துச் செல்லும் செயலுக்கு..............என பெயர்.**

அ. போக்குவரத்து ஆ. பெயர்ச்சியியல்
இ. வழங்கல் முறை ஈ. சந்தையியல்

**[விடை. (அ) போக்குவரத்து]**

**5. பெயர்ச்சியியலில் அரசாங்கம் தன் ஆதிக்கத்தை எதன் வழியாக செயலாக்குகிறது?**

அ. சட்டங்கள் வழியாக
ஆ. செலவுகளை குறைத்தல்
இ. போக்குவரத்து வழியாக
ஈ. பகிர்ந்தளித்தல் வழியாக

**[விடை. (ஈ) பகிர்ந்தளித்தல் வழியாக]**



orders@surabooks.com Ph: 9600175757 / 8124201000
Send Your Question Papers & Answer Keys to Our E-mail ID: Padasalai.Net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.Com
This is only for Sample
for Full Book order Online and Available at All Leading Bookstores



**5. மின்னணு வணிக மாதிரிகள் பற்றிக் குறிப்பு வரைக.** *[QY-2019]*

விடை : (i) **தொழில் நிறுவனத்திற்கும் வாடிக்கையாளர்களுக்கும் இடையேயான வணிகம் (B2C) :** இம்முறையில் தொழில் நிறுவனம் சம்பந்தப்பட்ட வாடிக்கையாளருக்கு நேரடியாகப் பொருளை விற்கின்றது.

(ii) **தொழில் நிறுவனங்களுக்கு இடையேயான வணிகம் (B2B) :** வியாபார நிறுமங்கள் தங்களுக்கிடையேயான பொருள் வாங்கல் விற்றல்களை மின்னணு வர்த்தகத்தின் மூலம் செய்து கொள்ளுவது இம்முறையில் அடங்கும் **(எ.கா.)** ப்ளிப்கார்ட், ஸ்னாப்டீல், அலிபாபா இன்டாமார்ட், டிரேட் இந்தியா.காம் போன்றவை.

(iii) **நுகர்வோர்களுக்கு இடையேயான வணிகம் (C2C) :** இம்முறையில் கைபேசி மூலமாகவோ, இணையதள விளம்பரத்தைப் பார்த்தோ, மின்னணு ஏலமுறையிலோ அல்லது ஒரு இடத்தில் இருக்கும் வாடிக்கையாளருக்கோ பொருள்களை விற்க முடியும்.

**(எ.கா)** இந்தியன் வென்ட்சர்ஸ் என்னும் கிராப்ட்லி அப்பிளிகேசன் (பொருளை விற்பது வாங்குவது) மூலம் கையால் தயாரிக்கப்பட்ட பொருட்களைப் பரந்த அளவில் பரிமாற பயன்படுத்தப்படுகிறது.

(iv) **வாடிக்கையாளருக்கும் தொழில் நிறுவனத்திற்கும் இடையேயான வணிகம் (C2B) :** தானியங்கிகள், மின்னணு பொருட்கள், அறைகலன் மற்றும் இதர பொருட்கள் இணையதளம் மூலமாக வாடிக்கையாளரால், தேவைப்படும் தொழில்களுக்கு விற்கப்படுவது இம்முறையில் அடங்கும். (எ.கா.) நாக்ரி டாட் காம் மற்றும் மான்ஸ்டர் டாட் காம் போன்றவை இந்திய நிறுமங்களால் நடத்தப்படும் மாதிரிகளாகும்.

(v) **தொழிற் நிறுவனத்திற்கும் அரசுக்கும் இடையேயான வணிகம் (B2G) :** பொருள் மற்றும் சேவைகள் அரசுத்துறைக்கு தொழில் நிறுவனங்கள் மூலம் விற்பனை செய்கின்றனர். **(எ.கா.)** டி.சி. எஸ் நிறுமம் கடவுச் சீட்டு உரிம விண்ணப்ப நடைமுறையினை வெளிநாட்டு உரிமம் வழங்கிட இந்திய அரசுக்காக தன்னுடைய மென்பொருள் மூலம் பணியை முடித்து வழங்குகிறது.

## அரசு தேர்வு வினாக்கள்

### 5 மதிப்பெண்கள்

**1. "தொழில் செயல்முறை புறத்திறனீட்டல்" என்ற தலைப்பில் கீழ்கண்டவற்றை விவரிக்க.** *[BEQ; Govt. MQP-2018]*

**(i) அதன் பொருள்**

**(ii) முதன்மை நடவடிக்கை**

**(iii) ஏதேனும் மூன்று நன்மைகள்**

விடை : (i) **பொருள்**

வெளி நிறுவனங்களிடமிருந்து ஒப்பந்த அடிப்படையில் சிறப்பு வேலைகளை (அ) செயல்களை பெறுவதற்கு தொழில் செயல்முறை புறத் திறனீட்டல் என்று பெயர். வாடிக்கையாளர்கள் சேவை மையம் மற்றும் புள்ளிவிவரங்களை கணினிமயமாக்குதல் போன்ற செயல்களை எடுத்துக்காட்டாகக் கொள்ளலாம்.

(ii) **முதன்மை மற்றும் இணைச் செயல்பாடுகள்**

நிறுவனங்கள் தங்களின் இணைச் செயல்பாடுகளில் கவனம் செலுத்துவதைக் காட்டிலும் முதன்மைச் செயல்பாடுகள் நிறைவடைவதில் கவனம் செலுத்தினால் மட்டுமே நீண்ட காலத்தில் நன்மைகளையும் மற்றும் ஆதாயங்களையும் அடைய முடியும். முதன்மை செயல்பாடுகள் என்பது அனுபவம், நிபுணத்துவம், செயல்திறன் மற்றும் நிபுணத்துவ துறையில் முதலீடு ஆகியவற்றை உள்ளடக்கியது. எனவே இணைச் செயல்பாடுகள் பொருத்தமட்டில் வெளிநபர்களில் யார் சிறப்பாக செய்கிறார்கள் என்று ஆராய்ந்து அறிந்து அவர்களிடம் அச்செயல்களை புற ஒப்படைப்புச் செய்வதன் மூலம் வர்த்தக ரீதியான வெற்றியை தற்போதைய வணிக சூழலில் தக்க வைத்துக் கொள்ளலாம்.

**நன்மைகள்**

1. **முதன்மை நடவடிக்கைகளில் கவனம் செலுத்துகிறது**

இதர இணை நடவடிக்கைகளை வெளி நிறுவனங்களிடம் புற ஒப்படைப்புச் செய்வதன் காரணமாக, நிறுவனங்கள் தங்களிடம் உள்ள சில தனித்துவமான திறனை செவ்வனே பயன்படுத்தி முதன்மை நடவடிக்கைகளில் கவனம் செலுத்துவதன் மூலம் நோக்கங்கள் அடைய இது உதவுகிறது.

www.Padasalai.Net
This is only for Sample
for Full Book order Online and Available at All Leading Bookstores
www.TrbTnpsc.Com

# அத்தியாயம் 18 தொழில் நன்நெறிகள் மற்றும் நிறுவன ஆளுகை

## பொருளடக்கம்

| | |
|---|---|
| 18.1. | தொழில் நன்நெறிகள் – கருத்து |
| 18.2. | தொழில் நெறிமுறையின் அடிப்படைக் கூறுகள் |
| 18.3. | தொழில் நெறிமுறையின் விதிகள் |
| 18.4. | பெருநிறுவன ஆளுகை |
| 18.5. | இந்தியாவில் பன்னாட்டு நிறுமங்கள் |
| 18.6 | பன்னாட்டு தரக்குறியீடுகள் |

## பயிற்சி

### I. சரியான விடையைத் தேர்ந்தெடு

**1. பின்வருவனவற்றில் எது சமுதாயத்திற்கு பொருட்களின் விற்பனையை அதிகரிக்கச் செய்ய உதவுகிறது?**

அ. வணிகத்தின் வெற்றி

ஆ. விதிகள் மற்றும் ஒழுங்கு முறைகள்

இ. ஒழுக்கவியல்

ஈ. தொழில்முறை நிர்வாகம்

**[விடை. (இ) ஒழுக்கவியல்]**

**2. நெறிமுறைகளுக்கான தேவைகள் ______.** *[Mar-2019]*

அ. உயர்மட்ட மேலாண்மை

ஆ. நடுத்தர அளவிலான மேலாளர்கள்

இ. மேலாண்மையில் இல்லாத தொழிலாளர்கள்

ஈ. மேற்கண்ட அனைத்தும்

**[விடை. (ஈ) மேற்கண்ட அனைத்தும்]**

**3. பின்வருவனவற்றில் எது ஒரு தொழில் நிறுவனத்தில் பயனுள்ள நன்நெறி நடைமுறைகளை உறுதி செய்யவில்லை?**

அ. ஒரு வெளியீட்டின் குறியீடு

ஆ. பணியாளர்களின் ஈடுபாடு

இ. இணக்க வழிமுறைகளை நிறுவுதல்

ஈ. இவற்றில் எதுவும் இல்லை

**[விடை. (அ) ஒரு வெளியீட்டின் குறியீடு]**

**4. தலைமை நிர்வாகத்தின் பங்கு என்பது, அதன் முழு அமைப்பு எதைநோக்கி வழி நடத்த வேண்டும்?** *[HY-2018]*

அ. பொது நடத்தை ஆ. அமைப்பு நடத்தை

இ. நேர்மையான நன்நெறி நடத்தை

ஈ. தனி நபர் நடத்தை

**[விடை. (இ) நேர்மையான நன்நெறி நடத்தை]**

**5. நிலையான நடைமுறைகளுக்கு வழிவகுக்கும் பணியாளர்களின் நெறிமுறை நடத்தை என்பது ______.**

அ. நன் நடத்தை ஆ. நெறிமுறை நடத்தை

இ. மோசமான நடத்தை ஈ. சரியாக முடிவெடுத்தல்

**[விடை. (ஈ) சரியாக முடிவெடுத்தல்]**



orders@surabooks.com Ph: 9600175757 / 8124201000
Send Your Question Papers & Answer Keys to Our E-mail ID: Padasalai.Net@gmail.com

www.Padasalai.Net This is only for Sample www.TrbTnpsc.Com
for Full Book order Online and Available at All Leading Bookstores



**6. நடப்புச் சொத்துக்களை வாங்குவதற்குத் தேவையான நிதிக்கான ஒரு உதாரணம்.** *[BEQ]*

அ. நிலைமுதல்

ஆ. இருத்தி வைக்கப்பட்ட ஆதாயம்

இ. நடைமுறை முதல்

ஈ. குத்தகை நிதி **[விடை. (இ) நடைமுறை முதல்]**

**7. ............. வைத்திருப்பவருக்கு வாக்களிக்கும் உரிமை உண்டு.**

அ. கடனீட்டுப்பத்திரம்

ஆ. முன்னுரிமைப் பங்குகள்

இ. நேர்மைப் பங்குகள்

ஈ. பத்திரங்கள் **[விடை. (இ) நேர்மைப் பங்குகள்]**

**8. நிலைச்சொத்துக்களை வாங்க ............. ஐ பயன்படுத்துவது சிறந்த தேர்வாக இருக்கும்.**

அ. கடனீந்தோர்

ஆ. நீண்ட காலக் கடன்கள்

இ. வங்கி மேல்வரைப்பற்று

ஈ. உண்டியலை வட்டம் செய்தல்

**[விடை. (ஆ) நீண்ட காலக் கடன்கள்]**

## II. குறுவிடை வினாக்கள்

**1. கடன் பத்திரங்கள் பற்றிக் குறிப்பு வரைக.**

**விடை :** (i) கடன் பத்திரம் என்பது நிறுமத்தின் மூலம் திரட்டப்பட்ட கடன்கள் குறித்த வெளிப்படையான அத்தாட்சியாகும்.

(ii) கடன் பத்திரங்கள் நிறுமத்திற்கு தேவையான நீண்ட கால முதலைத் திரட்டுவதில் பெரும் பங்கு வகிக்கின்றன.

(iii) கடன் பத்திரங்களை வைத்திருப்பவர்கள் கடன் பத்திரதாரர் என்று அழைக்கப்படுகிறார்.

(iv) நிறுமம் இலாபம் ஈட்டினாலும் அல்லது நட்டம் ஏற்பட்டாலும் கடன் பத்திரதாரர்களுக்குக் கண்டிப்பாக வட்டி வழங்கப்பட வேண்டும்.

**2. பொது வைப்பு என்றால் என்ன?** *[BEQ; HY-2018]*

**விடை :** (i) பொதுமக்கள் வங்கி மற்றும் நிதி நிறுவனங்களிடம் தங்கள் சேமிப்பை வைப்புத் தொகையாக முதலீடு செய்வதற்கு பொது வைப்பு என்று பெயர்.

(ii) நிறுமத்தின் நிலைவைப்பில் முதலீடு செய்ய விரும்பும் முதலீட்டாளர்கள் எந்தவிதச் சடங்குகளையும் பின்பற்றாமல், இதற்கென வழங்கப்படுகின்ற படிவங்களில் கேட்கப்படும் சிறு விவரங்களைப் பூர்த்தி செய்து அளிப்பதன் மூலமாக எளிய முறையில் முதலீடு செய்ய முடியும்.

**3. கடனாகப் பெறப்பட்ட நிதியின் கீழ் வரும் ஏதேனும் இரண்டு நிதி ஆதாரங்களைக் குறிப்பிடுக.** *[BEQ]*

**விடை :** கடனாகப் பெறப்பட்ட நிதிகள் என்பது கடன் அல்லது புற மூலங்களினால் பெறப்பட்ட நிதிகளைக் குறிக்கிறது. (எ.கா)

(i) கடன் பத்திரங்கள்

(ii) வங்கி மற்றும் நிதி நிறுவனங்களிடமிருந்து பெறும் கடன்.

(iii) பொது வைப்பு

(iv) குத்தகை நிதி

(v) வணிகத்தாள்.

**4. உட்புற நிதி மூலங்களின் கீழ் வகைப்படுத்தப்படும் ஏதேனும் இரண்டு நிதி ஆதாரங்களைக் குறிப்பிடுக.**

**விடை : உட்புற நிதி மூலங்கள் :**

(i) இருத்தி வைக்கப்பட்ட ஆதாயம்.

(ii) பெறுதற்குரிய மாற்றுச் சீட்டுகள்.

(iii) கடனாளிகளிடமிருந்து பெற வேண்டிய தொகை.

(iv) பழைய சொத்துகளை விற்பதன் மூலம் கிடைக்கும் ஆதாயம்.

**5. தொழில் நிதிமூலங்களைத் தேர்ந்தெடுப்பதை வரையறுக்கும் காரணிகளில் ஏதேனும் இரண்டினைக் குறிப்பிடுக.**

**விடை :** (i) **நிதி திரட்டும் செலவு :**

தொழில் நிறுவனங்கள் நிதி திரட்டுவதற்கு முன்பாக அதனைத் திரட்ட ஆகும் செலவுகளை ஆய்வு செய்ய வேண்டும்.

(ii) **நிறுவனத்தின் நிதித் திறன் :**

நிதிநிலையில் வலுவாக உள்ள நிறுவனங்கள், உடனடியாக வட்டி செலுத்தவும் மற்றும் குறிப்பிட்ட காலத்திற்குள் மூலதனத்தைத் திரும்பப் பெறும் திறனையும் கொண்டுள்ளன.

## III. சிறுவிடை வினாக்கள்

**1. தொழில் நிதியியல் - வரைவிலக்கணம் தருக.** *[HY-2019]*

**விடை :** (i) தொழில் நிதியியலுக்கு ஆர்.சி ஆஸ்போர்ன் கீழ்கண்டவாறு வரைவிலக்கணம் தருகிறார். “நிதியியல் செயல்பாடு என்பது, ஒரு வணிக நிறுவனம் நிதியினைத் திரட்டி, அதை முறையாகப் பயன்படுத்துவதற்கான செயலினைக் குறிப்பதாகும்”.

(அல்லது)

(ii) பி.ஒ. வீலர் அவர்களின் கூற்றுப்படி “தொழில் நிதியியல் என்பது முதலீட்டுக்கான நிதியைப் பெறுவதும், அதை முறையாகப் பயன்படுத்துவதன் மூலம் தொழில் நிறுவனங்களின் ஒட்டு மொத்த நோக்கங்களை நிறைவேற்றுவது தொடர்பான வணிகச் செயல்பாடுகள் ஆகும்.”

orders@surabooks.com Ph: 9600175757 / 8124201000
Send Your Question Papers & Answer Keys to Our E-mail ID: Padasalai.Net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.Com
This is only for Sample
for Full Book order Online and Available at All Leading Bookstores


(ii) இது பல்வேறு நாடுகளின் பணவீக்க வீதங்களை ஒப்பிட்டு, எந்த நாட்டுப் பத்திரங்களில் முதலீடு செய்வது என்ற முடிவுகளை முதலீட்டாளர்கள் எடுக்க உதவுகிறது.

(iii) இது பல்வேறு நாடுகளின் பொருளாதார நிலைமைகளை அறிந்து கொள்வதற்கும் மற்றும் சந்தை நிலவரங்களை தெரிந்து கொள்வதற்கும் உதவுகிறது.

(iv) பன்னாட்டு நிதி அறிக்கை அமைப்பின் (IFRS) மூலம் பல்வேறு நாடுகளின் நிதி அறிக்கைகளை ஒப்பாய்வு செய்ய உதவுகிறது.

(v) இது பன்னாட்டு நிதி அமைப்புகளின் அடிப்படை கட்டமைப்புகளைப் அறிந்து கொள்ளவும் மற்றும் அவற்றிடையே சீர் நிலையைப் பராமரிப்பதற்கும் உதவுகிறது.

(vi) பன்னாட்டுப் பணவியல் நிதியம், உலக வங்கி போன்ற நிதி அமைப்புகள், பல்வேறு நாடுகளிடையே எழும் நிதி சார்ந்த பிரச்சினைகளில் தலையிட்டு அவற்றை சுமூகமாக தீர்க்க உதவுகின்றன.

**2. உலகளாவிய வைப்பு இரசீதிற்கும் அமெரிக்க வைப்பு இரசீதிற்கும் உள்ள வேறுபாடுகள் யாவை?** *[BEQ; June-2019]*

**விடை :** உலகளாவிய வைப்பு இரசீதிற்கும் அமெரிக்க வைப்பு இரசீதிற்கும் உள்ள வேறுபாடுகள்

| வேறுபாட்டின் அடிப்படைகள் | உலகளாவிய வைப்பு இரசீது (GDR) | அமெரிக்க வைப்பு இரசீது (ADR) |
|---|---|---|
| மதிப்பிடுதல் | இது எந்த நாட்டுப் பணத்தின் மதிப்பிலும் குறிப்பிடப்படும் | இது அமெரிக்க டாலரில் மட்டுமே குறிப்பிடப்படும். |
| யாருக்கு இது வெளியிடப்படும் | ஒன்று அல்லது அதற்குமேல் உள்ள சந்தையில் உள்ள முதலீட்டாளருக்கு வெளியிடப்படும் | அமெரிக்கக் குடிமகனாக உள்ள முதலீட்டாளருக்கு மட்டுமே வெளியிடப்படும். |
| எங்குப் பட்டியலிடப்படும் | அமெரிக்கா தவிர்த்த இதர பங்கு மாற்றகங்கள். (எ.கா) இலண்டன் பங்கு மாற்றக வாரியம், லக்சம்பர் பங்கு மாற்றக வாரியம் போன்றவை | அமெரிக்கப் பங்கு மாற்றகங்களில் மட்டும் பட்டியலிடப்படும். |
| ஒப்புதல் | உலகளாவிய இரசீதை வெளியிட அந்நியச் செலாவணி கட்டுப்பாட்டு வாரியத்தின் ஒப்புதல் தேவையில்லை | அமெரிக்க வைப்பு இரசீதை வெளியிட அமெரிக்கப் பிணையங்கள் மற்றும் மாற்றக இயக்கத்தின் ஒப்புதல் தேவை. |
| வெளியீட்டு வழிமுறை | உலகளாவிய இரசீதுகள் பட்டியலிடப்பட்ட முழுமையான எண்ணிக்கை உடைய நேர்மைப்பங்குகளாக வெளியிடப்படும். | பல அமெரிக்க வைப்பு இரசீதுகள் தொடர்புடைய சிறு அலகுகளாக பிரிக்கப்பட்ட நேர்மை பங்குகளாக வெளியிடப்படும் |
| மாற்றுகைத்தன்மை | உலகம் முழுவதும் மாற்றக் கூடியது. | அமெரிக்காவில் மட்டும் மாற்றத்தக்கது. |

**3. அந்நியச் செலாவணி மாற்றுப்பத்திரத்தின் ஏதேனும் ஐந்து சிறப்புக் கூறுகளை விவரி.** *[HY-2019]*

**விடை : அந்நியச் செலாவணி மாற்று பத்திரத்தின் சிறப்பம்சங்கள்:**

(i) அந்நியச் செலாவணி மாற்று பத்திரம் என்பது இந்திய நிறுமங்கள் **அயல்நாட்டு செலாவணியில் வெளியிடும்** ஒரு வகை பத்திரம் ஆகும்.

(ii) இவை கடனீட்டுப்பத்திரங்களைப் போல பட்டியலிடப்பட்டு அயல்நாட்டு பங்கு மாற்றங்களில் வியாபாரம் செய்யப்படுகின்றன.

(iii) இது **மாற்றத்தக்க கடன் ஆவணமாகும்.** இதனுடன் வட்டிக்கான அனுமதி உரிமை ஆணை இணைந்திருக்கும்.

(iv) இதனை வைத்திருப்பவர்களுக்கு முன் குறித்த விலையில் குறிப்பிட்ட எண்ணிக்கையில் பங்குகளாக மாற்றிக்கொள்ளவும் உரிமை தரப்படுகிறது.

(v) குறிப்பிட்ட காலத்திற்குபின் இவைகளை நேர்மை பங்குகளாகவோ அல்லது வைப்பு இரசீதாகவோ மாற்றிக்கொள்ள முடியும்.

(vi) இந்தப் பத்திரம் மூலம் பெறப்படும் நிதியை, வெளிப்புற வணிகக் கடன் தொடர்பாக இயற்றப்பட்டுள்ள வழிகாட்டுதல் நெறிமுறைப்படியே பயன்படுத்தப்பட வேண்டும்.

orders@surabooks.com Ph: 9600175757 / 8124201000
Send Your Question Papers & Answer Keys to Our E-mail ID: Padasalai.Net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.Com
This is only for Sample
for Full Book order Online and Available at All Leading Bookstores

# அத்தியாயம் 21 குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் மற்றும் சுய உதவிக் குழுக்கள்

## பொருளடக்கம்


21.1. குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள்

21.2. குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களின் பங்கு மற்றும் முக்கியத்துவம்

21.3. இந்தியப் பொருளாதார வளர்ச்சியில் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களின் பங்கு

21.4. தமிழ்நாட்டில் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள்

21.5. சுய உதவிக் குழுக்கள்


## பயிற்சி

### I. சரியான விடையைத் தேர்ந்தெடு

**1. குறு, சிறு, மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களின் மேம்பாட்டு சட்டம் இயற்றப்பட்ட ஆண்டு** *[Mar-2019]*

அ. 2004 ஆ. 2007
இ. 2006 ஈ. 2008

[விடை. (இ) 2006]

**2. நாட்டின் பொருளாதாரத்தில் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களின் ................ பங்களிப்பு இன்றியமையாதவை.**

அ. தொழில்துறை உற்பத்தி
ஆ. ஏற்றுமதி
இ. வேலைவாய்ப்பு
ஈ. மேற்கூறிய அனைத்தும்

[விடை. (ஈ) மேற்கூறிய அனைத்தும்]

**3. சுய உதவிக் குழுக்கள் தங்கள் சேமிப்புத் தொகையை வசூலித்து.............. ஏற்படுத்த வேண்டும்.** *[BEQ; HY-2018]*

அ. பொது நிதி
ஆ. குழு தொகுப்பு நிதி
இ. குழு நிதி
ஈ. மேலே குறிப்பிடப்பட்ட எதுவும் இல்லை

[விடை. (ஆ) குழு தொகுப்பு நிதி]

**4. சுய உதவிக் குழுக்களுக்குக் கடன் அளிக்க ................ வேறுபட்ட முறைகள் உள்ளன.** *[HY-2019]*

அ. 1 ஆ. 2
இ. 3 ஈ. 4

[விடை. (இ) 3]

**5. உற்பத்தி துறையின் கீழ்ஒரு குறு நிறுவனத்தின் முதலீட்டு உச்ச வரம்பு.................லட்சத்திற்கு மிகக்கூடாது.** *[BEQ; June-2019]*

அ. 10 ஆ. 20
இ. 25 ஈ. 50 [விடை. (இ) 25]



orders@surabooks.com Ph: 9600175757 / 8124201000
Send Your Question Papers & Answer Keys to Our E-mail ID: Padasalai.Net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.Com
This is only for Sample
for Full Book order Online and Available at All Leading Bookstores



**2. உள்நாட்டு வியாபாரம் என்றால் என்ன?**

விடை : (i) ஒரு **குறிப்பிட்ட நாட்டின் எல்லைக்குள் நடைபெறும் வியாபாரமே** உள்நாட்டு வியாபாரம் எனப்படும்.

(ii) பொருட்களையும் சேவைகளையும் வாங்குவதும் விற்பதும் ஒரு நாட்டின் எல்லைக்குள் நடைபெறும்.

(iii) ஒரே நாட்டிற்குள், ஒரே இடத்தில், கிராமத்தில், மாநிலத்தில் அல்லது பல்வேறு மாநிலங்களுக்கிடையே நடைபெறும் வியாபாரம் ஆகும்.

**3. திரு. விக்ரம் என்பவர் தான் நடத்தி வரும் பின்னலாடை தொழிற்சாலைக்குத் தேவையான பஞ்சினை வெளிநாட்டில் இருந்து வாங்குகிறார். இது எவ்வகை வியாபாரத்திற்கு எடுத்துக்காட்டு?**

விடை : திரு. விக்ரம் என்பவர் தான் நடத்தி வரும் பின்னலாடைத் தொழிற்சாலைக்குத் தேவையான பஞ்சினை வெளிநாட்டிலிருந்து வாங்குவதால், இது இறக்குமதி வியாபாரம் ஆகும். உள்நாட்டு தேவைக்காக வெளிநாட்டிலிருந்து பொருட்களை வாங்குவதே இறக்குமதி வியாபாரம் ஆகும்.

**4. இந்தியாவில் உள்ள திரு. விக்ரம் தனது தயாரிப்பான பருத்தியினால் தயாரிக்கப்பட்ட சட்டைகளை இங்கிலாந்தில் உள்ள நிறுவனத்திற்கு விற்கிறார். இது எவ்வகை வியாபாரத்திற்கு எடுத்துக்காட்டு?**

விடை : உள்நாட்டு உற்பத்திப் பொருட்களை வெளிநாடுகளுக்கு விற்பது ஏற்றுமதி வியாபாரம் ஆகும். இந்தியாவில் உள்ள திரு. விக்ரம் தனது தயாரிப்புகளான பருத்தியினால் தயாரிக்கப்பட்ட சட்டைகளை இங்கிலாந்திற்கு விற்கிறார். எனவே ஏற்றுமதி வியாபார வகையைச் சாந்ததாகும்.

**5. வியாபாரத்தை எவ்வாறு வகைப்படுத்துவாய்?**

விடை : வியாபாரத்தை இருபெரும் பிரிவுகளாகப் பிரிக்கலாம். அவைகளாவன :

(i) உள்நாட்டு வியாபாரம்

(ii) பன்னாட்டு வியாபாரம்.

**6. உள்நாட்டு வியாபாரத்தின் வகைகள் யாவை?**

விடை : உள்நாட்டு வியாபாரத்தை இரு வகைகளாகப் பிரிக்கலாம். அவை

(i) மொத்த வியாபாரம்

(ii) சில்லறை வியாபாரம்.

**7. இறக்குமதி என்றால் என்ன?**

விடை : உள்நாட்டுத் தேவைக்காக **வெளிநாட்டிலிருந்து பொருட்களை வாங்குவதே** இறக்குமதி வியாபாரம் ஆகும். உதாரணமாக, இந்தியா வளைகுடா நாடுகளிலிருந்து பெட்ரோலியப் பொருட்களை இறக்குமதி செய்வதைக் கூறலாம்.

**8. மறு ஏற்றுமதி என்பதன் பொருள் யாது?**

விடை : ஒரு நாட்டில் இருந்து **பொருட்களை இறக்குமதி செய்து அவற்றை வேறுநாடுகளுக்கு ஏற்றுமதி மூலம் விற்பது** மறு ஏற்றுமதி வியாபாரம் ஆகும்.

**9. TVS நிறுவனம் ஐரோப்பிய நாடுகளுக்கு மோட்டார் பைக்குகளை விற்பது எவ்வகை வியாபாரத்திற்கு எடுத்துக்காட்டு?**

விடை : டிவிஎஸ் நிறுவனம் ஐரோப்பிய நாடுகளுக்கு தனது இரு சக்கர மோட்டார் வாகனங்களை ஏற்றுமதி செய்வதால், இது ஒரு ஏற்றுமதி வியாபாரம் ஆகும்.

**10. பன்னாட்டு வணிகத்தில் இந்தியாவில் உபயோகிக்கப்படும் பணமதிப்பின் பெயர் என்ன?**

விடை : பன்னாட்டு வணிகத்தில் இந்தியா, உபயோகப்படுத்தும் பணத்தின் பெயர் இந்திய ரூபாய் என்பதாகும்.

## III. சிறுவிடை வினாக்கள்

**1. வெளிநாட்டு வியாபாரத்தின் வகைகள் யாவை?**

விடை : வெளிநாட்டு வியாபாரத்தை மூன்று வகைகளாகப் பிரிக்கலாம்.

(i) **இறக்குமதி வியாபாரம் :** உள்நாட்டுத் தேவைக்காக வெளிநாட்டிலிருந்து பொருட்களை வாங்குவது இறக்குமதி வியாபாரம் ஆகும். உதாரணமாக, இந்தியா வளைகுடா நாடுகளிலிருந்து பெட்ரோலியப் பொருட்களை இறக்குமதி செய்கிறது.

(ii) **ஏற்றுமதி வியாபாரம் :** உள்நாட்டு உற்பத்திப் பொருட்களை வெளி நாடுகளுக்கு விற்பது ஏற்றுமதி வியாபாரம் ஆகும். உதாரணமாக, இந்தியா இரும்பு. எஃகு போன்றவற்றை ஜப்பானுக்கு ஏற்றுமதி செய்கிறது.

(iii) **மறு ஏற்றுமதி வியாபாரம் :** ஒரு நாட்டிலிருந்து பொருட்களை இறக்குமதி செய்து அவற்றை வேறு நாடுகளுக்கு ஏற்றுமதி மூலம் விற்பது மறு ஏற்றுமதி வியாபாரம் ஆகும். உதாரணமாக, இந்தியாவில், சூரத் நகரில் உள்ள வைர வியாபாரிகள் வைரங்களை தென் ஆப்பிரிக்காவிலிருந்து இறக்குமதி செய்து அதனைப் பட்டை தீட்டி மீண்டும் ஆம்ஸ்டர்டம் நகரில் உள்ள பன்னாட்டுச் சந்தைக்கு அனுப்பி வைக்கிறார்கள்,

**2. மறு ஏற்றுமதி வியாபாரத்திற்கு உதாரணங்கள் இரண்டினைத் தருக.** *[HY-2018]*

விடை : **உதாரணம் :**

(i) இந்தியாவில், சூரத் நகரில் வைர வியாபாரிகள் தென் ஆப்பிரிக்காவிலிருந்து துண்டிக்கப்படாத வைரங்களை இறக்குமதி செய்து, அவற்றைத் துண்டாக்கி பட்டை தீட்டி மீண்டும் ஆம்ஸ்டர்டம் நகரில் உள்ள பன்னாட்டு வைரச் சந்தைக்கு ஏற்றுமதி செய்கிறார்கள்.

(ii) சிங்கப்பூர், துபாய், ஹாங்காங், லண்டன் ஆகிய நாடுகள் உலகின் மிகப்பெரிய மறு ஏற்றுமதி மையங்களாகும்.

orders@surabooks.com Ph: 9600175757 / 8124201000
Send Your Question Papers & Answer Keys to Our E-mail ID: Padasalai.Net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.Com
This is only for Sample
for Full Book order Online and Available at All Leading Bookstores



(vii) **பொருளுக்கான சேவைகளின் தேவை :**

1. நிறுவுதல், இயக்கிக் காண்பித்தல் முதலான சேவைகள் தேவைப்படும் இயந்திரச் சாதனங்கள் போன்றவற்றை விநியோகிக்கக் குறைந்த அளவிலான வழங்கல் வழி தான் உகந்தது.
2. உற்பத்தியாளரால் அல்லது அவரால் பயிற்றுவிக்கப்பட்ட தொழில்நுட்பவியலாளர்கள் தேவையான தொழில்களுக்கு குறைந்த வழங்கல் வழியே போதுமானது.

## கூடுதல் வினாக்கள்

### சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக

**1 மதிப்பெண்**

**1. கீழ்வருவனவற்றுள் எது சரியாகப் பொருந்தவில்லை?**

அ. ஏலதாரா் - ஏலம்கேட்போர்
ஆ. கழிவு முகவர் - இலாபம்
இ. பிணை முகவர் - பிணைக்கழிவு
ஈ. தரகர் - தரகு

**[விடை. (ஆ) கழிவு முகவர் - இலாபம்]**

**2. முகவர்கள் _______ ஆல் நியமிக்கப்படுகின்றனர்.**

அ. மொத்த வியாபாரி ஆ. சில்லரை வியாபாரி
இ. முதல்வர் ஈ. நுகர்வோர்

**[விடை. (இ) முதல்வர்]**

**3. வழங்கல் வழியிலுள்ள இறுதி இடைநிலையர்**

அ. மொத்த வியாபாரி ஆ. உற்பத்தியாளர்
இ. நுகர்வோர் ஈ. சில்லறை வியாபாரி

**[விடை. (ஈ) சில்லறை வியாபாரி]**

**4. _______ என்பது உற்பத்தி செய்யப்பட்ட பொருள் உற்பத்தியாளரிடமிருந்து நுகர்வோரைச் சென்றடைய உதவும் பாதை ஆகும்.**

அ. வழங்கல் வழி ஆ. வியாபாரம்
இ. கழிவு ஈ. தரகு

**[விடை. (அ) வழங்கல் வழி]**

**5. சரக்கு, மதிப்பு, செலுத்தத்தக்க முறை வழியாகச் சரக்குகள் அனுப்பும்பொழுது, வராக்கடனால் ஏற்படும் நட்டம் தவிர்க்கப்படுகிறது.**

அ. தொலைத்தொடர்பு வழி வணிகம்
ஆ. அஞ்சல் வழி வணிகம்
இ. துறைவாரிப் பண்டகச் சாலை
ஈ. நுகர்வோர் கூட்டுறவுப் பண்டகசாலை

**[விடை. (ஆ) அஞ்சல் வழி வணிகம்]**

### சிறுவிடை வினாக்கள் 3 மதிப்பெண்கள்

**1. பிணை [கழிவு] முகவர் பற்றி குறிப்பு வரைக.**

(i) பொருட்களைக் கடனுக்கு விற்கும்போது, அதற்குரிய தொகையை வசூலித்துத் தருவதாக தன்னுடைய முதல்வருக்கு ஒப்புறுதி அளிப்பவரே "பிணை (கழிவு) முகவர்" ஆவார்.

(ii) கடன் தொகையை செலுத்தத் தவறும் போது (வாராக்கடன்) அந்த நட்டத்தை பிணை முகவரே ஏற்கிறார்.

(iii) அதற்காக அவருக்கு வழக்கமாக வழங்கப்படும் கழிவுடன் கூடுதல் கழிவு வழங்கப்படும். அது "பிணை கழிவு" எனப்படும்.

**2. மொத்த வியாபாரிக்கும் சில்லறை வியாபாரிக்கும் இடைய உள்ள வேறுபாடுகளுள் ஏதேனும் மூன்றினை எழுதுக.**

(i) **இணைப்புச் சங்கிலி :**

மொத்த வியாபாரி உற்பத்தியாளரையும் சில்லறை வியாபாரியையும் இணைக்கிறார். ஆனால் சில்லறை வியாபாரி மொத்த வியாபாரியையும் நுகர்வோரையும் இணைக்கிறார்.

(ii) **செயல்பாட்டு அளவு :**

மொத்த வியாபாரம் பெருமளவில் நடப்பதால் தொழிலுக்கு மிகப் பெரும் அளவு முதல் தேவைப்படுகிறது. ஆனால் சில்லறை வியாபாரம் சிறு அளவில் மட்டுமே நடப்பதால் சிறிய அளவு முதல் தொகையே போதுமானது.

(iii) **கிடைக்கும் பொருள்கள் :**

மொத்த வியாபாரி ஒரே வகையான பொருட்களை மட்டுமே வாங்கி விற்கிறார். ஆனால் சில்லறை வியாபாரி பலதரப்பட்ட நுகர்வோரின் தேவைகளைப் பூர்த்தி செய்யும் வண்ணம் பலவிதமான பொருட்களை வாங்கி விற்பார்.

☆☆☆

www.Padasalai.Net www.TrbTnpsc.Com
This is only for Sample
for Full Book order Online and Available at All Leading Bookstores



## II. குறுவிடை வினாக்கள்

**1. பன்னாட்டு வணிகம் என்பதன் பொருள் யாது?** *[BEQ; HY-2018]*

விடை : (i) பன்னாட்டு வணிகம் என்பது நாடுகளின் **புவியியல் எல்லைகளைக் கடந்து நடைபெறும்** அனைத்து வணிக நடவடிக்கைகளையும் குறிக்கும்.

(ii) இது சரக்கு மற்றும் சேவைகளின் பரிமாற்றம் மட்டுமல்லாமல் மூலதனம், பணியாளர்கள், தொழில்நுட்பம், காப்புரிமை, வணிகக் குறி, அறிவுசார் உரிமை மற்றும் பதிப்புரிமைகளை உள்ளடக்கியது.

**2. ஏற்றுமதி வியாபாரம் என்றால் என்ன?** *[June-2019; HY-2019]*

விடை : ஏற்றுமதி வியாபாரம் என்பது உள்நாட்டிலிருந்து சரக்கு மற்றும் சேவைகளை அயல்நாட்டிற்கு விற்பனை செய்வதாகும்.

**3. இறக்குமதி வியாபாரம் என்றால் என்ன?**

விடை : இறக்குமதி வியாபாரம் என்பது அயல் நாட்டிலிருந்து பொருட்களை வாங்கி உள்நாட்டிற்கு கொண்டு வருவதாகும்.

**4. மறு ஏற்றுமதி வியாபாரம் என்றால் என்ன?**

விடை : (i) ஒரு நாட்டில் உள்ள ஒரு நிறுவனம் ஏற்றுமதி செய்யும் நோக்கத்துடன் மற்ற நாடுகளிலிருந்து இறக்குமதி செய்தால் அது மறு ஏற்றுமதி வணிகம் எனப்படும்.

(ii) எடுத்துக்காட்டாக இந்திய வியாபார நிறுவனம் ஈரான் நாட்டிலிருந்து கச்சா எண்ணெயை இறக்குமதி செய்து அதை சுத்திகரித்து நேபாள நாட்டிற்கு ஏற்றுமதி செய்வது மறு ஏற்றுமதி வணிகம் ஆகும்.

**5. பன்னாட்டு வணிகத்திற்கான இரண்டு காரணங்களைக் கூறுக.**

விடை : (i) உபரியான வளங்களைக் கொண்டுள்ள நாடுகள் அந்த வளங்களை பற்றாக்குறையாக உள்ள நாடுகளுக்கு கொண்டு செல்வதற்கு பன்னாட்டு வணிகம் அவசியமாகிறது.

(ii) வளர்ந்த நாடுகள் மேம்பட்ட தொழில் நுட்பத்தின் காரணமாக பொருட்கள் மற்றும் சேவைகளை குறைவான விலைக்கு உற்பத்தி செய்கின்றன. வளரும் மற்றும் பின்தங்கிய நாடுகளினால் அவ்வாறு உற்பத்தி செய்ய முடிவதில்லை. இதன் காரணமாக அயல் நாட்டு வணிகம் அவசியமாகிறது.

## III. சிறுவிடை வினாக்கள்

**1. ஒரு நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு ஏற்றுமதி வணிகத்தின் முக்கியத்துவத்தை விளக்குக.**

விடை : (i) **வளங்களின் சமமற்ற பகிர்வு :**

1. உலக நாடுகள் அனைத்தும், எல்லா இயற்கை வளங்களையும் சமமாகவோ அல்லது சமனற்ற முறையிலோ பெற்றிருக்கின்றன.
2. அனைத்து நாடுகளிலும் இயற்கை வளங்கள் சமமான அளவில் அல்லது சீராக அமையப்பெறவில்லை.
3. இதன் காரணமாக இயற்கை வளங்களை உபரியாக கொண்டுள்ள நாடுகள் தங்கள் நாட்டில் கிடைக்காத பற்றாக்குறையான வளங்களை வேறு நாடுகளோடு பரிமாற்றம் செய்துகொள்ள வேண்டியதாகிறது.

(ii) **உற்பத்திக் காரணிகளின் சீரற்ற கிடைப்புத்தன்மை:**

நாடுகளுக்கிடையே உற்பத்திக் காரணிகளின் (நிலம், உழைப்பு, முதல் மற்றும் தொழில் நுட்பம்) கிடைப்புத்தன்மை சீரற்ற முறையில் அமைந்துள்ளது. பன்னாட்டு வணிகம் ஒரு நாட்டில் கூடுதலாக உள்ள உற்பத்திக் காரணியைத் தேவையுள்ள மற்ற நாட்டிற்கு மாற்றுவதற்கு பன்னாட்டு வணிகம் வழிவகுக்கிறது.

(iii) **சிறப்புத் தேர்ச்சி :**

சில நாடுகள் அல்லது குறிப்பிட்ட நாட்டின் சில பகுதிகள், திறமையான உழைப்பாளிகள், சாதகமான பருவ நிலை, இயற்கை வளங்களின் கிடைப்புத்தன்மை, மற்றும் தொழில் நுட்ப அறிவு போன்ற காரணிகளால் சில பொருட்களை அதிக அளவில் உற்பத்தி செய்கின்றன.

**2. மறு ஏற்றுமதி வியாபாரத்தின் தேவை என்ன?**

விடை : பின்வரும் சூழ்நிலைகளில் மறு ஏற்றுமதி வணிகம் தேவையாகிறது.

(i) ஒரு நாடு பொருட்களை இறக்குமதி செய்யும் நாட்டோடு எந்தவித நேரடி வணிகத் தொடர்பும் இல்லாதபோது,

(ii) இறக்குமதி செய்யப்பட்ட பொருட்களை மீண்டும் ஏற்றுமதி செய்வதற்கு முன்னர் அதில் ஏதேனும் மாற்றம் செய்ய வேண்டி இருந்தாலும் அல்லது முடிவுப் பொருளாக மாற்ற வேண்டி இருந்தாலும் மற்றும் அந்த வசதிகள் ஏற்றுமதி அல்லது இறக்குமதி செய்யும் நாடுகளில் இல்லாமலிருந்தால்,

(iii) இரண்டு நாடுகளிக்கிடையே வணிக ஒப்பந்தங்கள் ஏதும் இல்லாமலிருந்தால், மற்றும்

(iv) ஏற்றுமதியாளருக்கும் மற்றும் இறக்குமதியாளருக்கும் இடையே சரியான பொருளாதார உறவு இல்லாமலிருந்தால், மறு ஏற்றுமதி வியாபாரம் தேவையாகிறது.

**3. பன்னாட்டு வணிகத்தின் வரையறைகள் யாவை?** *[BEQ]*

விடை : (i) ரோஜர் பென்னட் கூற்றுப்படி, "நாட்டின் எல்லைகளை கடந்து நடைபெறும் அனைத்து வணிக நடவடிக்கைகளே பன்னாட்டு வணிகம் ஆகும்".

(ii) ஜான்டி டேனியல் மற்றும் லீ எச்ரேடெப் அவர்களின் கூற்றுப்படி, "பன்னாட்டு வணிகம் என்பது இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட நாடுகளில் நடைபெறும் வணிக நடவடிக்கைகள் ஆகும்".

orders@surabooks.com Ph: 9600175757 / 8124201000
Send Your Question Papers & Answer Keys to Our E-mail ID: Padasalai.Net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.Com
This is only for Sample
for Full Book order Online and Available at All Leading Bookstores

# அத்தியாயம் 26 ஏற்றுமதி மற்றும் இறக்குமதி நடைமுறைகள்

## பொருளடக்கம்

26.1. ஏற்றுமதி நடைமுறை
26.2. இறக்குமதி நடைமுறை

## பயிற்சி

### I. சரியான விடையைத் தேர்ந்தெடு

**1.** EPC **யின் விரிவாக்கம்** *[BEQ; HY-2018]*

அ. ஏற்றுமதி செயல்முறை குழு
ஆ. ஏற்றுமதி வளர்ச்சிக் குழு
இ. ஏற்றுமதி சரக்கேற்றி குழு
ஈ. ஏற்றுமதி வளர்ச்சி காங்கிரஸ்

**[விடை. (ஆ) ஏற்றுமதி வளர்ச்சிக் குழு]**

**2.** STC **யின் விரிவாக்கம்**

அ. மாநில பயிற்சி மையம்
ஆ. மாநில பயிற்சி சபை
இ. மாநில வணிக மையம்
ஈ. மாநில வணிக கழகம்

**[விடை. (ஈ) மாநில வணிக கழகம்]**

**3. இறக்குமதியாளரால் தயாரிக்கப்பட்டு சரக்கை வாங்குவதற்கு ஏற்றுமதியாளருக்கு அனுப்பபடும் ஆவணம்............ஆகும்.** *[BEQ]*

அ. இடாப்பு
ஆ. சரக்காணை
இ. விசாரணை
ஈ. கப்பல் வாடகை முறி

**[விடை. (ஆ) சரக்காணை]**

**4. கப்பல் தலைவரால் சரக்கு பெற்றுக் கொண்டதற்கு ஆதாரமாக வழங்கப்படும் இரசீது**

அ. அனுப்புகை இரசீது
ஆ. கப்பல் இரசீது
இ. கப்பல் துணைத்தலைவர் இரசீது
ஈ. வாணிகத்தூதுவர் இடாப்பு

**[விடை. (ஆ) கப்பல் இரசீது]**

**5. ஏற்றுமதியாளரால் சுங்க நடைமுறைகளைப் பின்பற்ற நியமிக்கப்படும் முகவர்**

அ. அகற்றீட்டு முகவர்
ஆ. அனுப்புகை முகவர்
இ. கழிவு முகவர்
ஈ. தன் பொறுப்பு முகவர்

**[விடை. (ஆ) அனுப்புகை முகவர்]**

### II. குறுவிடை வினாக்கள்

**1. சரக்காணை என்றால் என்ன?** *[BEQ;HY-2018; Mar-2019]*

விடை : (i) சரக்காணை என்பது **சரக்கை ஏற்றுமதி செய்வதற்கான ஒரு ஆதாரம்** ஆகும்.

(ii) இறக்குமதியாளர் வியாபார விசாரணைக்குப் பிறகு சரக்கை வாங்குவதற்கான சரக்காணையைத் தானோ அல்லது தன்முகவர் மூலமோ ஏற்றுமதியாளருக்கு அனுப்பி வைக்கிறார்.

**2. ஏற்றுமதி வளர்ச்சி நிறுவனங்கள் மூன்றினை குறிப்பிடுக.**

விடை : (i) மாநில வாணிகக் கழகம்.
(ii) இந்திய வணிக மேம்பாட்டு நிறுவனம்.
(iii) சரக்குகள் வாரியம்.



orders@surabooks.com Ph: 9600175757 / 8124201000
Send Your Question Papers & Answer Keys to Our E-mail ID: Padasalai.Net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.Com
This is only for Sample
for Full Book order Online and Available at All Leading Bookstores

# அத்தியாயம் 27 பன்னாட்டு வணிகத்தின் ஒருங்கிணைப்பாளர்கள்

## பொருளடக்கம்

27.1. உலக வர்த்தக அமைப்பு
27.2. உலக வங்கி
27.3. பன்னாட்டு நாணய நிதியம்
27.4. தெற்காசிய நாடுகளின் வட்டார ஒத்துழைப்புக்கான கூட்டமைப்பு

## பயிற்சி

### I. சரியான விடையைத் தேர்ந்தெடு

**1. சுங்க வரிகள் மற்றும் வாணிபம் மீதான பொது ஒப்பந்தம் கையெழுத்தான நாள்**

அ. 30 அக்டோபர் 1947 ஆ. 29 அக்டோபர் 1947
இ. 28 அக்டோபர் 1947 ஈ. 26 அக்டோபர் 1947

**[விடை. (அ) 30 அக்டோபர் 1947]**

**2. உலக வர்த்தக அமைப்பு உருவாக்கப்பட்ட நாள்** *[HY-2019]*

அ. 1-1-1996 ஆ. 1-1-1997
இ. 1-1-1995 ஈ. 1-1-1994

**[விடை. (இ) 1-1-1995]**

**3. உலக வர்த்தக அமைப்பின் தலைமையகம் அமைந்துள்ள இடம்** *[BEQ; HY-2018]*

அ. நியூயார்க் ஆ. இலண்டன்
இ. ஜெனிவா ஈ. பிரேசில்

**[விடை. (இ) ஜெனிவா]**

**4. உலக வர்த்தக அமைப்பின் தினசரி அலுவல் ............. டம் ஒப்படைக்கப்பட்டிருக்கிறது.**

அ. மேலாண்மைக்குழு ஆ. பொதுக்குழு
இ. நிர்வாகக்குழு ஈ. பொதுச்சபை

**[விடை. (ஆ) பொதுக்குழு]**

**5. உலக வங்கி அமைந்திருப்பது**

அ. வாஷிங்டன் DC ஆ. நியுயார்க்
இ. டோக்கியோ ஈ. ஹாங்காங்க்

**[விடை. (ஆ) நியுயார்க்]**

### II. குறுவிடை வினாக்கள்

**1. உலக வர்த்தக அமைப்பு என்றால் என்ன?** *[BEQ]*

விடை : (i) உலக வர்த்தக அமைப்பு 1995 சனவரி 1 அன்று நிறுவப்பட்டது.

(ii) GATT சில மாற்றங்களுடன் உலக வர்த்தக அமைப்பாக மாற்றப்பட்டது.

(iii) இது சுவிட்சர்லாந்து நாட்டில் உள்ள ஜெனீவாவில் அமைந்துள்ளது.

(iv) அனைத்து உறுப்பு நாடுகளின் பிரதிநிதிகளை உள்ளடக்கிய அமைச்சரவை உலக வர்த்தக அமைப்பின் மிக உயர்ந்த முடிவெடுக்கும் அதிகாரம் படைத்த அமைப்பாகும்.

**2. உலக வங்கி என்பதன் பொருள் யாது?**

விடை : **மறுகட்டமைப்பு மற்றும் மேம்பாட்டிற்கான பன்னாட்டு வங்கி :** மறுகட்டமைப்பு மற்றும் மேம்பாட்டிற்கான **பன்னாட்டுவங்கிஉலகவங்கி**என்றுஅழைக்கப்படுகிறது. இது **புனரமைப்பு பணிகளை மேற்கொள்ளவும்** மற்றும் **வளர்ந்து வரும் நாடுகளுக்கு உதவி செய்திடவும்** 1944ஆம் ஆண்டு உருவாக்கப்பட்டது.



orders@surabooks.com Ph: 9600175757 / 8124201000
Send Your Question Papers & Answer Keys to Our E-mail ID: Padasalai.Net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.Com
This is only for Sample
for Full Book order Online and Available at All Leading Bookstores



**2. வாணிப சமநிலை என்றால் என்ன?** *[BEQ]*

**விடை :** வாணிபச் சமநிலை என்பது ஒரு வருடத்தில், ஒரு நாட்டின் ஏற்றுமதி மற்றும் இறக்குமதி மதிப்புகளுக்கு இடையிலான நிகர விளைவைக் குறிக்கிறது. ஒரு நாட்டின் **ஏற்றுமதியை விட அதன் இறக்குமதி அளவு குறைவாக இருந்தால்,** அது **சாதகமான வாணிபச் சமநிலையைக் காட்டுகிறது.** ஒரு நாட்டின் ஏற்றுமதியை விட அதன் இறக்குமதி அளவு அதிகமாக இருந்தால், அது பாதகமான வாணிபச் சமநிலையைக் காட்டுகிறது.

**3. செலுத்தல் சமநிலை - வரையறு.**

**விடை :** டோமினி சல்வடோரின் கூற்றுப்படி "குறிப்பிட்ட ஒரு காலகட்டத்தில் வழக்கமாக ஒரு காலண்டர் ஆண்டில், மற்ற அனைத்து நாடுகளின் குடியிருப்பவர்களுடன் ஒரு நாட்டின் குடியிருப்பவர்களின் அனைத்து நடவடிக்கைகளும் கொள்கைப்படி பதியப்படும் ஒரு தொகுப்பு அறிக்கையே செலுத்தல் நிலை ஆகும்".

**4. தனியார் மூலதனத்தின் உள்ளடக்கம் யாது?**

**விடை :** (i) அயல் நாட்டு முதலீடுகள்

(ii) நீண்டகாலக் கடன்கள்

(iii) அயல்நாட்டு நாணய வைப்பு ஆகியவற்றை உள்ளடக்கியது.

**5. வங்கி மூலதனத்தின் உள்ளடக்கம் யாது?**

**விடை :** அந்நியச்செலாவணியைக்கையாளஅதிகாரம்கொண்ட, வணிக மற்றும் கூட்டுறவு வங்கிகளின் வெளிப்புற நிதி சார்ந்த சொத்துகள் மற்றும் பொறுப்புகளின் அளவு, வங்கி மூலதனத்தில் அடங்குகிறது.

**6. அலுவல் சார்ந்த மூலதனத்தின் உள்ளடக்கம் யாது?**

**விடை :** அலுவல் சார்ந்த மூலதனத்தில், அயல்நாட்டு நாணயம், அரசிடம் உள்ள சிறப்பு எடுப்பு உரிமைகள் போன்ற வகைகளில் உள்ள ரிசர்வ் வங்கியின் சொத்துகள் போன்றவை அடங்குகின்றது.

## III. சிறுவிடை வினாக்கள்

**1. செலுத்தல் சமநிலை அறிக்கை ஏன் தயாரிக்கப்பட வேண்டும்?**

**விடை :** (i) பன்னாட்டு வணிகத்தில் ஒரு குறிப்பிட்ட காலத்திற்கு, ஒரு நிறுவனத்தின் பெறுதல்கள் மற்றும் செலுத்துதல்கள் போன்ற பணப் பரிமாற்றங்களின் நிகர விளைவை ஆய்வு செய்யும் ஒரு கருவியாகும்.

(ii) செலுத்தல் சமநிலை, ஒரு நாட்டு அரசின் பணம் சார்ந்த, பொதுநிதி சம்பந்தமான, மற்றும் வாணிபக் கொள்கைகளை வடிவமைக்க உதவுகிறது. அரசு தன் கொள்கை முடிவுகளை எடுப்பதற்காக, முக்கிய வியாபார நிறுவனங்களின் செலுத்தல் நிலையை உன்னிப்பாகக் கவனித்து வருகின்றன.

(iii) ஒரு நாடு தன்னுடைய வளர்ச்சிக்கான நிதியைப் பெற, போதுமான பொருளாதார விளைவுகளைப் பெற்றுள்ளதா என்பதை எடுத்துக்காட்டுகிறது. இது ஒவ்வொரு காலாண்டிற்கோ அல்லது ஒரு வருடத்திற்கோ இதற்கான அறிக்கையை தாக்கல் செய்யப்படவேண்டும்.

**2. செலுத்தல்சமநிலைஅறிக்கைஎதைவெளிக்காட்டுகிறது?**

**விடை :** (i) செலுத்தல் சமநிலை, ஒரு நாட்டின் ஏற்றுமதி அதன் இறக்குமதியை விட அதிகமாக இருந்தால் மிகையாக இருக்கும். இந்த நிலை அரசாங்கம் மற்றும் குடியிருப்போர்கள் பாதுகாப்பாக இருப்பதைக் குறிக்கிறது. அவை உள்நாட்டு உற்பத்திக்குத் தேவையான மூலதனத்தை வழங்கும் நிலையில் இருக்கும்.

(ii) இந்தச் சாதகமான நிலையில் மற்ற நாடுகளுக்குக் கடன் கொடுக்கவும், அந்நாட்டுப் பொருட்களை வாங்கவும் முடியும்.

(iii) இது வலுவான உள்நாட்டு சந்தையை உருவாக்குகிறது. இது நாணய மாற்று விகித ஏற்றத்தாழ்வுகளிலிருந்து பொருளாதாரத்தைப் பாதுகாக்கிறது.

(iv) ஒரு நாட்டின் இறக்குமதியானது, ஏற்றுமதியை விட அதிகமாக இருந்தால், பற்றாக்குறை நிலையைச் சுட்டிக்காட்டுகிறது. இந்தச் சூழ்நிலையானது, இறக்குமதி செய்வதற்குத் தேவையான தொகையை, பிற நாடுகளிடம் கடனாகப் பெற வேண்டிய நிலைக்கு இட்டுச் செல்கிறது.

**3. நடப்புக் கணக்கின் வரவுப் பக்கத்தில் தோன்றும் இனங்கள் யாவை?** *[BEQ]*

**விடை : வரவினங்கள் :**

(i) பொருட்களின் ஏற்றுமதிகள் (கண்ணுக்குப் புலனாவது)

(ii) கண்ணுக்குப் புலனாகாத ஏற்றுமதிகள்

(iii) அயல்நாட்டில் செய்யப்பட்ட போக்குவரத்து சேவைகள்.

(iv) அயல்நாட்டில் செய்யப்பட்ட வங்கியியல் சேவைகள்.

(v) அயல்நாட்டில் செய்யப்பட்ட காப்பீட்டு சேவைகள்.

(vi) வெளிநாடுகளில் செய்யப்பட்ட முதலீடுகள் மற்றும் கடன்களின் மீது பெறப்பட்ட வருமானங்கள்.

(vii) அயல்நாட்டு சுற்றுலாப் பயணிகளால் உள்நாட்டில் செய்யப்பட்ட செலவுகள்

**4. மூலதனக் கணக்கின் உள்ளடக்கங்கள் யாவை?** *[HY-2019]*

**விடை :** மூலதனக் கணக்கில் மூன்று இனங்கள் உள்ளன.

(i) தனியார் மூலதனம்

(ii) வங்கி மூலதனம்

(iii) அலுவல் சார்ந்த மூலதனம்.

orders@surabooks.com Ph: 9600175757 / 8124201000
Send Your Question Papers & Answer Keys to Our E-mail ID: Padasalai.Net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.Com
This is only for Sample
for Full Book order Online and Available at All Leading Bookstores



## கூடுதல் வினாக்கள்

### சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக

1 மதிப்பெண்

**1. சட்டப்படி செல்லக் கூடிய தன்மை அடிப்படையில் இடம் பெறும் ஒப்பந்தம் எது?** *[BEQ]*

அ. செல்லாத ஒப்பந்தம்
ஆ. போல்வு ஒப்பந்தம்
இ. மறைமுக ஒப்பந்தம்
ஈ. வெளிப்படை ஒப்பந்தம்

**[விடை. (அ) செல்லாத ஒப்பந்தம்]**

**2. உருவாக்க அடிப்படையில் வகைப்படுத்தப்படும் ஒப்பந்தம் எது?**

அ. முரணான ஒப்பந்தம்
ஆ. போல்வு ஒப்பந்தம்
இ. தவிர்த்த ஒப்பந்தம்
ஈ. செல்லாத ஒப்பந்தம்

**[விடை. (ஆ) போல்வு ஒப்பந்தம்]**

**3. நிறைவேற்ற அடிப்படையில் வகைப்படுத்தப்படும் ஒப்பந்தம் எது?**

அ. செல்லாத ஒப்பந்தம்
ஆ. மறைமுக ஒப்பந்தம்
இ. நிறைவேறிய ஒப்பந்தம்
ஈ. நிறைவேறா ஒப்பந்தம்

**[விடை. (இ) நிறைவேறிய ஒப்பந்தம்]**

### குறுவிடை வினாக்கள் 2 மதிப்பெண்கள்

**1. இந்திய ஒப்பந்தச் சட்டத்தின் இரு பகுதிகள் யாவை?**

**விடை :** இந்திய ஒப்பந்தச் சட்டம் இரு பகுதிகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது. அவை பொது ஒப்பந்தங்கள், சிறப்பு ஒப்பந்தங்கள்.

**2. உடன்பாடுகள் எத்தனை வகைப்படும் ? அவை யாவை?**

**விடை :** உடன்பாடுகள் இரண்டு வகைகளாகப் பிரிக்கப்படுகின்றன அவை : சட்டத்தால் நடைமுறைப் படுத்த முடியாத ஒப்பந்தம், சட்டத்தால் நடைமுறைப் படுத்தக் கூடிய ஒப்பந்தம்.

**3. ஏற்பு என்றால் என்ன?** *[BEQ]*

**விடை :** ஏற்பு 2 (b) (Acceptance) முன்மொழிதல் யாருக்கு செய்யப்பட்டதோ அவரே அதை ஏற்றுக்கொள்வதாகக் கூறியவுடன் அவ்வாறு செய்யப்பட்ட முன்மொழிதல் ஏற்றுக்கொள்ளப்பட்டதாகக் கூறப்படுகின்றது.

**4. மறுபயன் என்றால் என்ன?**

**விடை :** போலக் என்பவரது கூற்றுப்படி, "ஒருவரின் வாக்குறுதியைப் பெற மற்றவரால் அளிக்கப்படும் விலையே மறுபயனாகும். அவ்வாறு மதிப்பைப் பெறும் பொருட்டு செய்யப்பட்ட வாக்குறுதி செயல்படுத்த கூடியதாகும்".

### சிறுவிடை வினாக்கள் 3 மதிப்பெண்கள்

**1. இந்திய ஒப்பந்தச் சட்டம், 1872 குறிப்பு வரைக.** *[BEQ]*

**விடை :**
(i) வணிகச் சட்டத்தின் ஒரு கிளையே இந்திய ஒப்பந்தச் சட்டமாகும். வியாபாரம் அல்லது வர்த்தக நடவடிக்கைகளில் ஈடுபட ஒப்பந்தச் சட்டம் உதவியாக இருக்கின்றது.

(ii) இது வணிகர்களை மட்டுமல்லாமல், ஒட்டுமொத்த சமுதாயத்தையும் பாதிக்கிறது. ஒப்பந்தத்தில் ஈடுபடும் நபர்கள் தங்களின் உரிமைகளையும், கடமைகளையும் உருவாக்கிக் கொள்ள முடியும்.

(iii) மேலும் அந்தக் கடமைகளை செய்யத் தவறிவிட்டால் பாதிக்கப்பட்ட நபருக்கு உரிய தீர்வுகளைக் காண உதவுகின்றது. இந்திய ஒப்பந்தச் சட்டம் நம் அனைவரையும் ஏதோ ஓர் விதத்தில் பாதிக்கிறது.

(iv) எடுத்துக்காட்டாக புத்தகம் வாங்குதல், திரைப்படம் பார்த்தல், வங்கியிடம் கடன் பெறுதல், பேருந்தில் பயணம் செய்தல் போன்ற தினசரி வாழ்வின் பல நடவடிக்கைகள் ஒப்பந்த நடவடிக்கைகள் ஆகும்.

(v) இந்திய ஒப்பந்தச் சட்டம் பெரும்பாலும் ஆங்கில பொது சட்டத்தின் அடிப்படையிலேயே இயற்றப்பட்டுள்ளது. இந்திய ஒப்பந்தச் சட்டம் 1872 ஆம் ஆண்டு செப்டம்பர் 1ஆம் தேதி ஜம்மு மற்றும் காஷ்மீர் மாநிலம் தவிர இந்தியா முழுவதிலும் நடைமுறைக்கு கொண்டுவரப்பட்டது.

(vi) இது இந்தியாவில் வணிக நடவடிக்கைகளை ஒழுங்குபடுத்தும் அனைத்து விதிகளையும் தெளிவாக வரையறுத்துள்ளது.

☆☆☆

orders@surabooks.com Ph: 9600175757 / 8124201000
Send Your Question Papers & Answer Keys to Our E-mail ID: Padasalai.Net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.Com
This is only for Sample
for Full Book order Online and Available at All Leading Bookstores

# அத்தியாயம் 30 ஒப்பந்த நிறைவேற்றம்

## பொருளடக்கம்

30.1. ஒப்பந்தங்களின் நிறைவேற்றம்
30.2. ஒப்பந்தத்தை யார் நிறைவேற்றலாம்?
30.3. இருதரப்பு வாக்குறுதிகள்

## பயிற்சி

### I. சரியான விடையைத் தேர்ந்தெடு

**1. செல்லத்தக்க நிறைவேற்றம் ஒப்பந்த நபர்கள் தங்களுடைய கடமையை செய்வது, அந்த ஒப்பந்தம்**

அ. ஒப்பந்த நிறைவேற்றம்
ஆ. நடைமுறைப்படுத்தப்படும்
இ. செல்லாதது
ஈ. இவை எதுவும் இல்லை

**[விடை. (அ) ஒப்பந்த நிறைவேற்றம்]**

**2. பின்வரும் நபர்களில் யாரால் ஒப்பந்தம் நிறைவேற்ற முடியும்?**

அ. வாக்குறுதி வழங்குபவர் மட்டும்
ஆ. வாக்குறுதி வழங்குபவரின் சட்ட பிரதிநிதிகள்
இ. வாக்குறுதி வழங்குபவரின் முகவர்
ஈ. இவை அனைத்தும்

**[விடை. (ஈ) இவை அனைத்தும்]**

**3.** A, B, C, **கூட்டு ஒப்பந்தத்தின்படி ₹ 50,000** D **என்பவருக்கு செலுத்த வேண்டும் என ஒப்பந்தம் செய்யப்பட்டது. அதை நிறைவேற்றுவதற்கு முன்,** C **இறந்து விடுகிறார். இங்கே, ஒப்பந்தம்** *[BEQ]*

அ. C யின் மரணத்தினால் ஒப்பந்தம் செல்லாது
ஆ. C சட்ட பிரதிநிதிகளுடன் சேர்ந்து A மற்றும் B ஆகியோரால் ஒப்பந்தம் நிறைவேற்றப்பட வேண்டும்.
இ. A மற்றும் B மட்டும் தனியாக நிறைவேற்றப்பட வேண்டும்.
ஈ. A, B மற்றும் D க்கு இடையே ஒப்பந்தம் புதுப்பிக்கப்பட வேண்டும்.

**[விடை. (ஆ) C சட்ட பிரதிநிதிகளுடன் சேர்ந்து A மற்றும் B ஆகியோரால் ஒப்பந்தம் நிறைவேற்றப்பட வேண்டும்.]**

**4. இவர்களில் யார் வாக்குறுதியின் நிறைவேற்றத்தைக் கோர முடியாது?**

அ. வாக்குறுதி பெறுபவர்
ஆ. கூட்டு வாக்குறுதி அளித்தவர்கள்.
இ. ஒரு வாக்குறுதி பெறுபவர் மரணத்தின் போது, அவரது சட்ட பிரதிநிதி.
ஈ. ஒப்பந்தத்திற்கு மூன்றாம் நபர்

**[விடை. (ஈ) ஒப்பந்தத்திற்கு மூன்றாம் நபர்]**

**5. மூன்றாம் நபர் என்று யாரை கூறுகின்றோம்?** *[BEQ]*

அ. வாக்குறுதி அளிப்பவர்
ஆ. வாக்குறுதி பெறுபவர்
இ. முகவர்
ஈ. சட்டரீதியான பிரதிநிதி

**[விடை. (இ) முகவர்]**

### II. குறுவிடை வினாக்கள்

**1. ஒரு ஒப்பந்தத்தை நிறைவேற்ற வழிகள் யாவை?**

விடை : ஒரு ஒப்பந்தம் நிறைவேற்றப்பட இரண்டு வழிகள் உள்ளன.

(i) உண்மையான நிறைவேற்றம்
(ii) நிறைவேற்றுவதற்கான முனைவு.

**2. சட்டரீதியான பிரதிநிதி என்பவர் யார்?**

விடை : தனிப்பட்ட ஆற்றல் சார்ந்த ஒப்பந்தங்களில் வாக்குறுதி அளித்தவர், ஒப்பந்தத்தை தனிப்பட்ட முறையில் நிறைவேற்ற வேண்டும். அந்நிலையில் வாக்குறுதி அளித்தவர் இறந்துவிட்டால், அந்த ஒப்பந்தம் முடிவடைகிறது. ஆயினும் தனிப்பட்ட ஆற்றலை நம்பி இல்லாத ஒப்பந்தங்களைப் பொறுத்தவரை, வாக்குறுதி அளித்தவரின் சட்ட ரீதியான வாரிசுதாரர் அவரது மறைவிற்குப் பிறகு நிறைவேற்றலாம்.



orders@surabooks.com Ph: 9600175757 / 8124201000
Send Your Question Papers & Answer Keys to Our E-mail ID: Padasalai.Net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.Com
This is only for Sample
for Full Book order Online and Available at All Leading Bookstores



**3. பணிக்கு ஏற்ற தொகை என்றால் என்ன?** *[BEQ]*

விடை : ஒப்பந்தத்தில் ஈடுபடும் ஒரு நபர், வாக்குறுதியை நிறைவேற்றிய பின்னர் மற்றொரு நபர் ஒப்பந்தத்தை மீறுவதால், பணிக்கு ஏற்ற தொகை என்று கூற்று எழுகிறது. "எவ்வளவு ஈட்டப்பட்டதோ அவ்வளவு" என்ற சொல்லின் பொருள் "**பணிக்கு ஏற்ற தொகை**" எனப்படுகிறது.

## III. சிறுவிடை வினாக்கள்

**1. இருதரப்பு உடன்படிக்கையின் மூலம் விடுவிப்பின் வகைகள் யாவை?**

விடை : (i) உடன்பாட்டின் விளைவாக ஒப்பந்தம் ஏற்படுவது போல, அதில் ஈடுபட்டுள்ள நபர்கள் ஒன்றிணைந்த உடன்பாட்டை ஒரு முடிவுக்குக் கொண்டு வரலாம். இருதரப்பு உடன்படிக்கையின் மூலம் விடுவிப்பு பின்வரும் ஏதேனும் வழிகளில் இருக்கலாம்.

(ii) ஒப்பந்தத்தில் ஈடுபட்டுள்ள நபர்கள் **வெளிப்படையாகவோ** அல்லது **உட்கிடையாகவோ ஒப்பந்தத்தை முடிவுக்குக் கொண்டு வரலாம்.**

(iii) இருதரப்பு விடுப்பு பின்வரும் ஏதேனும் ஒரு வழியில் செய்யப்படலாம். அவை பரிமாற்றம், திருத்தம், தள்ளுபடி, ரத்து செய்தல், இணைப்பு.

**2. நிறைவேற்றத்தின் அடிப்படையில் ஒப்பந்த விடுவிப்பு என்றால் என்ன?**

விடை : ஒப்பந்தத்தில் ஈடுபட்டுள்ள நபர்கள் தமது கடமைகளைச் செய்தால், ஒப்பந்தம் நிறைவேற்றப்பட்டதாகக் கருப்படும். நிறைவேற்றம் என்பது உடன்பாட்டின்படி இருக்க வேண்டும். வாக்குறுதி அளித்தபடி குறிப்பிட்டக் காலத்தில், குறிப்பிட்ட முறையில் ஒப்பந்தம் நிறைவேற்றப்பட வேண்டும். நிறைவேற்றம் இரண்டு வகைப்படும். அவை

(i) உண்மையான நிறைவேற்றம்

(ii) நிறைவேற்றுவதாக முனைவு செய்தல்

**3. ஒப்பந்தம் நிறைவேற்ற இயலாது போதலுக்கான காரணங்கள் யாவை?** *[BEQ]*

விடை : சில நிகழ்ச்சிகளால், ஒரு ஒப்பந்தத்தை நிறைவேற்ற முடியாமல் போனால், அது இயலாது போதலால் விடுவிப்பு எனப்படும். அதனால் ஒப்பந்த நபர்கள் தமது கடமைகளிலிருந்து விடுவிக்கப்படுகின்றனர்.

நிறைவேற்றம் இயலாது போதல் இரண்டு வகைப்படும், அவை

(i) உடன்படிக்கை ஏற்படும் பொழுதே நிறைவேற்ற இயலாமை.

(ii) ஒப்பந்தம் உருவாகிய பின்னர் ஏற்படும் இயலாமை

உடன்படிக்கை ஏற்படும் பொழுதே அது நிறைவேற்றப்பட முடியாது என்பது :

(i) ஒப்பந்த நபர்களுக்கு தெரிந்து இருக்கலாம்.

(ii) ஒப்பந்த நபர்களுக்கு தெரியாமல் இருக்கலாம்.

அதேபோல ஒரு ஒப்பந்தம் உருவாகிய பின்னர் ஏற்படும் இயலாமை அல்லது இடையில் இயலாமல் போதலால் விடுவிப்பு போன்றவை :

(i) ஒப்பந்த நபர்களின் கட்டுப்பாட்டிற்கு அப்பாற்பட்ட சில நிகழ்வுகள் அல்லது

(ii) வாக்குறுதி அளித்தவர் அல்லது வாக்குறுதி பெறுபவர் சில செயல்களால் ஏற்படலாம்.

**4. இழப்பீடு தொகை தொடர்பான பல்வேறு விதிகள் யாவை?** *[BEQ]*

விடை : (i) இழப்பீடு என்பது ஒப்பந்தம் மீறுகையால் பாதிக்கப்பட்ட நபர் அடைந்த நட்டத்தை ஈடுகட்டும் வகையில் தவறிழைத்த நபரால் அளிக்கப்படும் பணம் சார்ந்த ஈடு ஆகும். ஆகவே பாதிக்கப்பட்ட நபர், ஒப்பந்தம் மீறுகைக்கு காரணமான நபர் மீது இழப்பீடு பெறும் வகையில் சட்ட நடவடிக்கை எடுக்கலாம்.

(ii) இந்திய ஒப்பந்தச் சட்டம் 1872 பிரிவு 73-ன்படி ஒப்பந்தத்தை மீறும் நபர் அதனால் பாதிக்கப்பட்ட நபருக்கு இழப்பீடு அளிக்கும் பொறுப்பு உள்ளது.

## IV. பெருவிடை வினாக்கள்

**1. ஒப்பந்த விடுவிப்பு வழிகளை விளக்குக.**

விடை : **ஒப்பந்தம் விடுவிக்கப்படும் வழிகள் :**

1. **நிறைவேற்றத்தின் மூலம் விடுவிப்பு :**

(i) ஒப்பந்தத்தில் ஈடுபட்டுள்ள நபர்கள் தமது கடமைகளைச் செய்தால், ஒப்பந்தம் நிறைவேற்றப்பட்டதாகக் கருதப்படும்.

(ii) நிறைவேற்றம் என்பது உடன்பாட்டின்படி இருக்க வேண்டும். வாக்குறுதி அளித்தப்படி குறிப்பிட்ட காலத்தில், குறிப்பிட்ட முறையில் ஒப்பந்தம் நிறைவேற்றப்பட வேண்டும்.

**நிறைவேற்றம் இரண்டு வகைப்படும்.**

(அ) உண்மையான நிறைவேற்றம்

(ஆ) நிறைவேற்றுவதாக முனைவு செய்தல்.

2. **இருதரப்பு உடன்படிக்கையின் மூலம் விடுவிப்பு :**

(i) ஒப்பந்தத்தில் ஈடுபடும் நபர்களின் உடன்படிக்கை, இருதரப்பு ஒத்துக்கொள்வதன் மூலம் உடன்பாட்டை முடிக்கலாம்.

(ii) உடன்பாட்டின் விளைவாக ஒப்பந்தம் ஏற்படுவது போல, அதில் ஈடுபட்டுள்ள நபர்கள் ஒன்றிணைந்து உடன்பாட்டை ஒரு முடிவுக்கு கொண்டு வரலாம்.

(iii) இருதரப்பு உடன்படிக்கையின் மூலம் விடுவிப்பு பின்வரும் ஏதேனும் வழிகளில் இருக்கலாம். அவை ஒப்பந்தத்தில் ஈடுபட்டுள்ள நபர்கள், வெளிப்படையாகவோ அல்லது உட்கிடையாகவோ ஒப்பந்தத்தை முடிவுக்கு கொண்டு வரலாம்.

orders@surabooks.com Ph: 9600175757 / 8124201000
Send Your Question Papers & Answer Keys to Our E-mail ID: Padasalai.Net@gmail.com

www.Padasalai.Net
This is only for Sample
for Full Book order Online and Available at All Leading Bookstores
www.TrbTnpsc.Com

# 33 மறைமுக வரிகள்

## பொருளடக்கம்


33.1. மறைமுக வரி என்பதன் பொருள்
33.2. சரக்கு மற்றும் சேவை வரி – பொருள்
33.3. சரக்கு மற்றும் சேவை வரிகள் குழுமம்


## பயிற்சி

### I. சரியான விடையைத் தேர்ந்தெடு

**1. சரக்கு மற்றும் சேவை வரி குழுமத்தின் தலைவர் யார்?**

அ. இந்திய ரிசர்வ் வங்கியின் தலைவர்
ஆ. நிதி அமைச்சர்
இ. பிரதம மந்திரி
ஈ. இந்திய குடியரசுத் தலைவர்

**[விடை. (ஆ) நிதி அமைச்சர்]**

**2. GST யின் விரிவாக்கம்** *[June-2019]*

அ. சரக்கு மற்றும் அளிப்பு வரி
ஆ. அரசு விற்பனை வரி
இ. சரக்கு மற்றும் சேவை வரி
ஈ. பொது விற்பனை வரி

**[விடை. (இ) சரக்கு மற்றும் சேவை வரி]**

**3. சரக்கு மற்றும் சேவை வரி என்பது**

அ. நேரடி வரி
ஆ. மறைமுக வரி
இ. சரக்கு மற்றும் சேவைகளின் வகையை பொருத்தது.
ஈ. வியாபார நடவடிக்கைகளைச் சார்ந்தது.

**[விடை. (ஆ) மறைமுக வரி]**

**4. IGST என்பது** *[BEQ]*

அ. ஒருங்கிணைந்த சரக்கு மற்றும் சேவை வரி
ஆ. இந்திய சரக்கு மற்றும் சேவை வரி
இ. ஆரம்ப சரக்கு மற்றும் சேவை வரி
ஈ. மேற்கூறிய அனைத்தும்

**[விடை. (அ) ஒருங்கிணைந்த சரக்கு மற்றும் சேவை வரி]**

**5. சரக்கு மற்றும் சேவை வரி விதிப்பு முறை நடைமுறைப்படுத்தப்பட்ட நாள்** *[BEQ; Mar-2019; HY-2019]*

அ. ஏப்ரல் 1, 2017 ஆ. சனவரி 1, 2017
இ. சூலை 1, 2017 ஈ. மார்ச்சு 1, 2017

**[விடை. (இ) சூலை 1, 2017]**

### II. குறுவிடை வினாக்கள்

**1. மறைமுகவரியின் வரைவிலக்கணம் தருக.**

விடை : **சரக்குகள் மற்றும் சேவைகளின் மீது வரிவிதிக்கப்பட்டு** விற்பனையாளரால் வாங்குபவர்களிடமிருந்து வசூலிக்கப்பட்டு பின்னர் அரசுக்கு செலுத்தப்படும் வரியே மறைமுக வரி என அழைக்கப்படுகிறது.

**2. இந்தியாவில் விதிக்கப்படும் மறைமுக வரிக்கு ஏதேனும் இரண்டு உதாரணங்கள் தருக.**

விடை : (i) சுங்கவரி,
(ii) சரக்கு மற்றும் சேவைவரி
(iii) மதிப்புக் கூட்டு வரி



orders@surabooks.com Ph: 9600175757 / 8124201000
Send Your Question Papers & Answer Keys to Our E-mail ID: Padasalai.Net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.Com
This is only for Sample
for Full Book order Online and Available at All Leading Bookstores

21-08-2018-இல் வெளியிடப்பட்ட அரசு மாதிரி வினாத்தாள் தரப்பட்டுள்ளது.

**11 ஆம் வகுப்பு** **அரசு மாதிரி வினாத்தாள் - 2018 - 19** (அத்தியாயங்கள் 1 - 16)

[நேரம் : 2.30 மணி] **வணிகவியல்** [மொத்த மதிப்பெண்கள் : 90]

## பிரிவு - I [20 × 1 = 20]

**குறிப்பு : (i) அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்.**
**(ii) கொடுக்கப்பட்டுள்ள நான்கு விடைகளில் மிகவும் ஏற்புடைய விடையினை தேர்ந்தெடுத்து குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதவும்.**

1. கூட்டுப் பங்கு நிறுமத்தின் பண்புகளாவன
(I) தனியான சட்ட நபர் தன்மையுடையதல்ல
(II) வரையறு பொறுப்பு
(III) நீடித்த வாழ்வு இல்லை
(IV) பொது முத்திரை
(அ) (I) மற்றும் (II) (ஆ) (II) மற்றும் (IV)
(இ) (I) மற்றும் (IV) (ஈ) (II) மற்றும் (III)

2. பின்வருவனவற்றுள் எது வியாபார நடவடிக்கையின் சிறப்பியல்புகள் இல்லை?
(அ) பொருட்கள் மற்றும் சேவையை உருவாக்குதல்
(ஆ) இடர் ஏற்றல்
(இ) பொருள் மற்றும் சேவை பரிமாற்றம் (அ) விற்பனை
(ஈ) சம்பளம் / கூலி

3. பொதுவாக அதிக இடர்பாட்டைக் கொண்டது
(அ) உற்பத்தித் தொழில் (ஆ) வணிகம்
(இ) வியாபாரம் (ஈ) இவை அனைத்தும்

4. கீழ்க்கண்டவற்றுள் எது கூட்டுரு-சாரா நிறுவனமாகும்?
(அ) கூட்டுப் பங்கு நிறுமம் (ஆ) தனியாள் வணிகம்
(இ) அரசு நிறுமம் (ஈ) கூட்டுறவு சங்கம்

5. கூட்டாண்மை ஒப்பாவணத்தை இவ்வாறு அழைக்கலாம்?
(அ) சங்க நடைமுறை விதிகள்
(ஆ) கூட்டாண்மை சங்க நடைமுறை விதிகள்
(இ) கூட்டாண்மை சட்டம்
(ஈ) கூட்டாண்மை

6. ஒரு நிறுமத்தின் இயக்குநரை கீழ்கண்டவற்றுள் யார் தேர்ந்தெடுக்கிறார்கள்?
(அ) கடனீந்தோர் (ஆ) கடனாளிகள்
(இ) கடனீட்டுப்பத்திரத்தாரர் (ஈ) பங்குதாரர்கள்

7. பட்டியல் I-ல் உள்ளவற்றை பட்டியல் II உடன் பொருத்திப் பார்த்து கீழே கொடுக்கப்பட்டுள்ள தொகுப்பிலிருந்து உங்கள் விடையை தெரிவு செய்க.

| | பட்டியல் I | | பட்டியல் II |
|---|---|---|---|
| (i) | பொருளாதார நோக்கங்கள் | 1. | வேலைவாய்ப்பு அளித்தல் |
| (ii) | சமூக நோக்கங்கள் | 2. | நுகர்வோரை திருப்திபடுத்துதல் |
| (iii) | நிறுவனநோக்கங்கள் | 3. | பொது நலன் |
| (iv) | தேசிய நோக்கங்கள் | 4. | இலாபம் ஈட்டுவது |

தொகுப்பு

| | (i) | (ii) | (iii) | (iv) |
|---|---|---|---|---|
| (அ) | 1 | 2 | 3 | 4 |
| (ஆ) | 4 | 3 | 2 | 1 |
| (இ) | 2 | 3 | 1 | 4 |
| (ஈ) | 3 | 4 | 1 | 2 |

8. தலைமை அலுவலகத்தின் கிளைகள் / உறுப்பு நிறுவனங்கள் / துணை நிறுவனங்களுக்கு முடிவெடுக்கும் அதிகாரத்தை குறிப்பது
(அ) மையப்படுத்துதல் (ஆ) பரவலாக்கம்
(இ) அதிகாரம் (ஈ) ஒருங்கிணைப்பு

9. ஒரு அரசு நிறுமம் யாருடைய பெயரில் பங்குகளை வாங்குகிறது?
(அ) பிரதம மந்திரி
(ஆ) குடியரசுத் தலைவர்
(இ) இந்திய தலைமை நீதிபதி
(ஈ) மாநில முதலமைச்சர்

10. கீழ்கண்ட கூற்றுகளில் எது தவறான கூற்றாகும்?
(அ) பூமியில் இருந்து தோண்டி எடுக்கும் இயற்கை வளங்கள் பிரித்தெடுக்கும் உற்பத்தி தொழிலாகும்.
(ஆ) தாவரங்களும், மிருகங்களும் நுகர்வோரின் உபயோகத்திற்காக வளர்க்கப்படுவது மரபுசார் தொழிற்சாலைகள் ஆகும்.
(இ) கச்சாப் பொருட்களை பல்வேறு படிநிலைகளில் பயன்படுத்தி பொருட்களை உற்பத்தி செய்வது தயாரிப்பு தொழிற்காலை ஆகும்.
(ஈ) கச்சாப் பொருட்கள் பல்வேறு படிநிலைகளைக் கடந்து தாட்கள் மற்றும் சர்க்கரை போன்ற பொருட்களை தயாரிப்பது கட்டுமானத் தொழிற்சாலை ஆகும்.

11. கீழ்க்கண்டவற்றுள் எது தொழிற்துறை வங்கி அல்ல?
(அ) இந்திய தொழில் நிதிக்கழகம்
(ஆ) தேசிய வீட்டு வசதி வங்கி
(இ) இந்திய சிறு தொழில்கள் வளர்ச்சி வங்கி
(ஈ) இந்திய தொழிற் வளர்ச்சி வங்கி

12. ஒரு பொது நிறுமத்தின் அமைப்பு முறையேட்டில் குறித்த உட்பிரிவில் கீழ்கண்டவற்றில் இடம்பெறுவது யாது?
(i) பொது நோக்கங்கள்
(ii) முக்கிய நோக்கங்கள்
(iii) துணை நோக்கங்கள்
(iv) தற்செயல் நோக்கங்கள்
(v) இதர நோக்கங்கள்
கீழே கொடுக்கப்பட்டுள்ள குறியீட்டை பயன்படுத்தி சரியான விடையைத் தேர்ந்தெடுக்கவும்.
(அ) (i), (ii) மற்றும் (iv) (ஆ) (ii), (iv) மற்றும் (v)
(இ) (i), (ii) மற்றும் (iii) (ஈ) (ii), (iii) மற்றும் (v)



orders@surabooks.com Ph: 9600175757 / 8124201000
Send Your Question Papers & Answer Keys to Our E-mail ID: Padasalai.Net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.Com
This is only for Sample
for Full Book order Online and Available at All Leading Bookstores

**11** ஆம் வகுப்பு.

# அரையாண்டுப் பொதுத் தேர்வு - 2019

## PART - III வணிகவியல்

பதிவெண் | | | | | | |

நேரம் : 3.00 மணி மொத்த மதிப்பெண்கள் : 90

அறிவுரைகள்:

(1) அனைத்து வினாக்களும் சரியாகப் பதிவாகி உள்ளதா என்பதனைச் சரிபார்த்துக் கொள்ளவும். அச்சுப்பதிவில் குறையிருப்பின், அறைக் கண்காணிப்பாளரிடம் உடனடியாகத் தெரிவிக்கவும்.

(2) நீலம் அல்லது கருப்பு மையினை மட்டுமே எழுதுவதற்கும் அடிக்கோடிடுவதற்கும் பயன்படுத்த வேண்டும். படங்கள் வரைவதற்கு பென்சில் பயன்படுத்தவும்.

### பகுதி - I

குறிப்பு : (i) அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும். **[20 × 1 = 20]**

(ii) கொடுக்கப்பட்டுள்ள மாற்று விடைகளில் மிகவும் ஏற்புடைய விடையைத் தேர்ந்தெடுத்துக் குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதவும்.

**1.** பாண்டியர் ஆட்சி காலத்தில் பொருட்கள் விற்பனை செய்யும் இடத்திற்கு ................. என்று பெயர்.
அ) அங்காடி ஆ) சந்தை
இ) நாளங்காடி ஈ) அல்லங்காடி

**2.** பெயர்ச்சியியலின் முக்கிய நன்மை
அ) உற்பத்தி மேம்பாடு
ஆ) செலவுகளை குறைத்தல்
இ) இலாபம் ஈட்டுதல் ஈ) பண்டகக் காப்பு

**3.** தொழிலின் முதன்மைக் குறிக்கோள் ...............
அ) இலாபம் ஈட்டுதல்
ஆ) இலாபம் ஈட்டாமல் இருத்தல்
இ) சிறப்புத் தேர்ச்சி ஈ) வேலைவாய்ப்பு

**4.** அதிக அளவு அபாயத்தைக் கொண்டது
அ) உற்பத்தி தொழில் ஆ) வணிகம்
இ) வியாபாரம் ஈ) இவை அனைத்தும்

**5.** கடன் பத்திரதாரர்கள் ஒரு நிலையான ............ விகிதம் பெறத் தகுதியுடையவர்கள்.
அ) பங்காதாயம் ஆ) இலாபம்
இ) வட்டி ஈ) நட்டம்

**6.** ................. என்பது நிறுமங்கள் அயல்நாட்டு செலாவணியைப் பெறுவதற்காகவே வெளியிடப்படும் ஒரு சிறப்பு வகை பத்திரமாகும்.
அ) அரசு பத்திரங்கள்
ஆ) அந்நியச் செலாவணி மாற்று பத்திரம்
இ) பெரு நிறுவன பத்திரங்கள்
ஈ) உலகளாவிய வைப்பு இரசீது

**7.** சுய உதவிக் குழுக்களுக்குக் கடன் அளிக்க .............. வேறுபட்ட முறைகள் உள்ளன.
அ) 4 ஆ) 5 இ) 3 ஈ) 13

**8.** கீழ்க்கண்டவற்றில் எது பழமையான வியாபார அமைப்பு வடிவம்?
அ) தனியாள் வணிகம் ஆ) கூட்டாண்மை
இ) கூட்டுறவு சங்கம் ஈ) நிறுமம்

**9.** இந்துக்கூட்டுக் குடும்ப வியாபாரத்தில் ஒருவர் எவ்வாறு உறுப்பினராகிறார்?
அ) உடன்படிக்கையால்
ஆ) பிறப்பால்
இ) முதலீட்டின் அடிப்படையில்
ஈ) நிர்வாகத்தின் அடிப்படையில்

**10.** ஒரு நாட்டின் அரசராலோ, அரசியாலோ வழங்கப்பட்ட சாசனத்தின் விளைவாக உருவாக்கப்படும் நிறுமங்கள் ............... எனப்படும்.
அ) பட்டய (அ) சாசன நிறுமங்கள்
ஆ) சட்டமுறை நிறுமங்கள்
இ) பதிவு செய்யப்பட்ட நிறுமங்கள்
ஈ) அயல்நாட்டு நிறுமங்கள்

**11.** கீழக்கண்ட அமைப்புகளில் எந்த அமைப்பிற்கு அரசு வரிச் சலுகைகளை வழங்குகிறது?
அ) கூடாண்மை ஆ) கூட்டுறவு சங்கம்
இ) கூட்டுப்பங்கு நிறுமம் ஈ) பன்னாட்டு நிறுமம்

**12.** ............. தீர்வக மையங்களை இந்திய ரிசர்வ் வங்கி தன்னகத்தே கொண்டுள்ளது.
அ) 14 ஆ) 840 இ) 6 ஈ) 60

**13.** வழங்கல் ஆணையுடன் ................ இணைக்கப்படுதல் வேண்டும்.
அ) பண்டக சான்றாணை
ஆ) துறைமுக சான்றாணை
இ) துறைமுக இரசீது
ஈ) பண்டகக் காப்பாளர் ரசீது

**14.** RTGS மூலம் குறைந்தபட்சம் எவ்வளவு பணம் பரிமாற்றம் செய்ய முடியும்?
அ) எவ்வளவு தொகை வேண்டுமானாலும்
ஆ) 50,000
இ) 2 லட்சம்
ஈ) 5 லட்சம்

**15.** முத்ரா வங்கி .............. வங்கிக்கு உதாரணம்.
அ) வெளிநாடு ஆ) வளர்ச்சி
இ) கூட்டுறவு ஈ) வணிக

**16.** பின்வருவனவற்றில் எது ஊழியர்களின் சமூக பொறுப்புணர்வு ஆகாது?
அ) நியாயமான ஊதியம்
ஆ) சரியான வசதிகள்
இ) சமூகப் பாதுகாப்பு
ஈ) சுரண்டல்



orders@surabooks.com Ph: 9600175757 / 8124201000
Send Your Question Papers & Answer Keys to Our E-mail ID: Padasalai.Net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.Com
This is only for Sample
for Full Book order Online and Available at All Leading Bookstores

**11** ஆம் வகுப்பு.

# பொதுத் தேர்வு மார்ச் - 2020

## PART - III வணிகவியல்

பதிவெண் | | | | | | |

கால அளவு : 3.00 மணி நேரம்] (விடைகளுடன்) [மொத்த மதிப்பெண்கள் : 90

அறிவுரைகள்:

(1) அனைத்து வினாக்களும் சரியாகப் பதிவாகி உள்ளதா என்பதனைச் சரிபார்த்துக் கொள்ளவும். அச்சுப்பதிவில் குறையிருப்பின், அறைக் கண்காணிப்பாளரிடம் உடனடியாகத் தெரிவிக்கவும்.

(2) நீலம் அல்லது கருப்பு மையினை மட்டுமே எழுதுவதற்கும் அடிக்கோடிடுவதற்கும் பயன்படுத்த வேண்டும். படங்கள் வரைவதற்கு பென்சில் பயன்படுத்தவும்.

### பகுதி - I

குறிப்பு : (i) அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்.

**[20 × 1 = 20]**

(ii) கொடுக்கப்பட்டுள்ள மாற்று விடைகளில் மிகவும் ஏற்புடைய விடையைத் தேர்ந்தெடுத்துக் குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதவும்.

1. புற ஒப்படைப்பின் முக்கிய நன்மை ................. .
அ) அலகுகள் ஆ) உற்பத்தித் திறன்
இ) செலவு குறைப்பு ஈ) திறன்

2. 'தொழில் என்பது இலாபம் ஈட்டுவதற்காக மேற்கொள்ளப்படும் பொருளாதார நடவடிக்கை' எனக் கூறியவர் :'
அ) வீலர் ஆ) ஸ்பிரிகில்ஸ்
இ) ஜேம்ஸ் ஸ்டீபன்சன் ஈ) H. ஹேனே

3. அன்பு மற்றும் பாசம் அல்லது சமூக சேவை உள்நோக்கம் ஆகியவற்றால் மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள்
அ) நிதி நடவடிக்கைகள் ஆ) பொருளாதாரச் செயல்பாடுகள்
இ) பண நடவடிக்கைகள்
ஈ) பொருளாதாரச் சார்பற்ற செயல்பாடுகள்

4. ................. வைத்திருப்பவருக்கு வாக்களிக்கும் உரிமை உண்டு.
அ) பத்திரங்கள் ஆ) கடனீட்டுப் பத்திரம்
இ) நேர்மைப் பங்குகள் ஈ) முன்னுரிமைப் பங்குகள்

5. குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்களின் மேம்பாட்டு சட்டம் இயற்றப்பட்ட ஆண்டு :
அ) 2008 ஆ) 2004 இ) 2007 ஈ) 2006

6. சரக்கு இறக்குமதி செய்யப்பட்டு மீண்டும் ஏற்றுமதி செய்யப்பட்டால் அது ................. .
அ) பன்னாட்டு வியாபாரம் ஆ) இறக்குமதி வியாபாரம்
இ) ஏற்றுமதி வியாபாரம் ஈ) மறு ஏற்றுமதி வியாபாரம்

7. சரக்கு மற்றும் சேவை வரி குழுமத்தின் தலைவர் யார்?
அ) இந்திய குடியரசுத் தலைவர்
ஆ) இந்திய ரிசர்வ் வங்கியின் ஆளுநர்
இ) நிதி அமைச்சர் ஈ) பிரதம மந்திரி

8. வருமானம் ஈட்டப்பட்ட ஆண்டு என்பது :
அ) நாட்காட்டி ஆண்டு ஆ) கணக்கீட்டு ஆண்டு
இ) முந்தைய ஆண்டு ஈ) ஒளி ஆண்டு

9. கீழ்க்கண்ட அமைப்புகளில் எந்த அமைப்பிற்கு அரசு வரிச் சலுகைகளை வழங்குகிறது?
அ) பன்னாட்டு நிறுமம் ஆ) கூட்டாண்மை
இ) கூட்டுறவு சங்கம் ஈ) கூட்டு பங்கு நிறுமம்

10. தனியார் வணிகத்தின் குறைபாடு :
அ) குறைந்த மூலதனம் ஆ) எளிதான அமைப்பு
இ) நெகிழ்வுத்தன்மை ஈ) வரையறாப் பொறுப்பு

11. கீழ்க்கண்டவற்றுள் எது நாடாளுமன்ற அல்லது மாநிலச் சட்டமன்றங்கள் இயற்றிய சட்டத்தின் மூலம் உருவாக்கப்படுகிறது?
அ) சட்டமுறை நிறுமம் ஆ) பட்டய (சாசன) நிறுமம்
இ) அயல்நாட்டு நிறுமம் ஈ) அரசு நிறுமம்

12. முதல் கூட்டுறவு இயக்கம் ராபர்ட் ஓவன் என்பவரால் ஆரம்பிக்கப்பட்ட ஆண்டு :
அ) 1944 ஆ) 1804 இ) 1844 ஈ) 1840

13. அரசு நிறுமத்தின் பங்கு முதலீடு ................. க்குக் குறையாமல் அரசு பெற்றிருக்க வேண்டும்.
அ) 60% ஆ) 75% இ) 95% ஈ) 51%

14. உற்பத்தியாளரிடம் பொருட்களை வாங்கிச் சில்லறை வியாபாரிகளுக்கு விற்பனை செய்பவர் ................. .
அ) நுகர்வோர்கள் ஆ) உற்பத்தியாளர்
இ) மொத்த வியாபாரி ஈ) சில்லறை வியாபாரி

15. இந்திய மைய வங்கி என்பது :
அ) ஐ.சி.ஐ.சி.ஐ. ஆ) பி.என்.பி.
இ) எஸ்.பி.ஐ. ஈ) ஆர்.பி.ஐ.

16. சட்டத்தால் நடைமுறைப்படுத்தப்படும் ஓர் உடன்படிக்கை :
அ) ஏற்றுக்கொள்ளப்பட்ட முனைவு ஆ) நிறைவேற்றக்கூடிய ஏற்பு
இ) ஒப்பந்தம் ஈ) ஒப்புக்கொண்ட வாக்குறுதி

17. வியாபார இடைநிலையர்களை ................. வகைகளாகப் பிரிக்கலாம்.
அ) நான்கு ஆ) மூன்று இ) இரண்டு ஈ) ஐந்து

18. பின்வருவனவற்றில் எது சமுதாயத்திற்கு பொருட்களின் விற்பனையை அதிகரிக்கச் செய்ய உதவுகிறது?
அ) தொழில்முறை நிர்வாகம் ஆ) வணிகத்தின் வெற்றி
இ) விதிகள் மற்றும் ஒழுங்குமுறைகள்
ஈ) ஒழுக்கவியல்

19. பின்வருவனவற்றை பொருத்துக :

| | | | |
|---|---|---|---|
| 1) | சுற்றாடும் / நகரும் வியாபாரிகள் | (i) | பொதுப் பண்டக சாலைகள் |
| 2) | நிலையிட சிற்றளவு சில்லறை வியாபாரிகள் | (ii) | மைக்ரோமேக்ஸ் இன்பர்மேட்டிக்ஸ் |
| 3) | நிலையிட பேரளவு சில்லறை வியாபார அமைப்புகள் | (iii) | சாலையோர வியாபாரிகள் |
| 4) | பன்னாட்டு வணிகம் | (iv) | மடங்கு கடைகள் |

அ) (1)-(ii), (2)-(iii), (3)-(iv), 4(i)
ஆ) (1)-(iv), (2)-(iii), (3)-(i), 4(ii)
இ) (1)-(iii), (2)-(i), (3)-(iv), 4(ii)
ஈ) (1)-(iii), (2)-(iv), (3)-(i), 4(ii)

20. சரக்குகளை முழுமையாகவோ அல்லது பகுதியாகவோ வழங்குவதற்காக பயன்படுத்தப்படும் ஆவணம் ............. .
அ) துறைமுக சான்றாணை
ஆ) பண்டக சான்றாணை மற்றும் வழங்கல் ஆணை
இ) துறைமுக இரசீது
ஈ) மேற்கூறிய அனைத்தும்



orders@surabooks.com Ph: 9600175757 / 8124201000
Send Your Question Papers & Answer Keys to Our E-mail ID: Padasalai.Net@gmail.com